பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 24 ஞாயிற்றுக்கிழமை 08.08.2021 கதிர் 276

## இனிது ரகசியம் அல்ல!

பிள்ளைகளின் முதல் பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுவது பெற்றோரின் பழக்கம்.

இது அநேகமாக எல்லா வீடுகளிலும் நடக்கும். அது பிள்ளையும் வீடும் சீரும் சிறப்புமாக இருந்தால் தான் சாத்தியம். பக்கம்02 »

## நாளுக்கு நாள் அதிகரிக்கும் பேரவலம்; மீண்டும் ஒரே நாளில் 98 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 08

இலங்கையில் மேலும் 98 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 98 பேரில் 47 ஆண்களும், 51 பெண்களும் அடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 17 ஆக அதிகரித்துள்ளது.

## நேற்று மாத்திரம் 2,796 பேர் தொற்றுடன் அடையாளம்!

இலங்கையில் மேலும் 2 ஆயிரத்து 796 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 27 ஆயிரத்து 19 ஆக உயர்வடைந்துள்ளது.


இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து ☞2

### இலங்கையில் அதிவேகமாகப் பரவுகின்றது ‘டெல்டா’

# சகலரும் தடுப்பூசியை உடன் பெறுங்கள்; அநாவசியமாக வெளியில் செல்லாதீர்கள்

### அரச தகவல் திணைக்களம் அறிவுறுத்து

உலக நாடுகள் பலவற்றில் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்திவரும் ‘டெல்டா’ கொரோனா திரிவு இலங்கையிலும் அதிவேகமாகப் பரவி வருவதால் அனைவரும் விரைவாகக் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். அத்துடன், அத்தியாவசியமற்ற தேவைகளுக்காக வீட்டிலிருந்து வெளியில் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. ☞2



## வடமராட்சியைச் சேர்ந்த மூவர் கொரோனோத் தொற்றால் பலி

### மேலும் இருவரின் பி.சி.ஆர். அறிக்கைக்கு காத்திருப்பு

பருத்தித்துறை மற்றும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் 3 பேர் கொரோனாத் தொற்று நோயால் உயிரிழந்துள்ளனர் என்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

கரவெட்டியைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று மாலை உயிரிழந்துள்ளார். அவர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கொரோனாத் தொற்று காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கொரோனா சிகிச்சைப் ☞2

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

## பிறந்து ஒரு நாளேயான குழந்தைக்கும் தொற்று

யாழ்ப்பாணத்தில் பிறந்து ஒரு நாளேயான குழந்தை ஒன்றுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் பிறந்த குழந்தைக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குழந்தையும் தாயும் தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த ☞2

## யாழில் தொற்றாளர்கள் நாள்தோறும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றனர் என்று கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் மாத்திரம்174 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் 17 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 07 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 29 பேருக்கும் ☞2

## கொரோனா நிலைமை மிக மோசம்; எவரும் ஆர்ப்பாட்டம் நடத்தாதீர்கள்!



### அமைச்சர் வீரசேகர கோரிக்கை

நாட்டின் கொரோனா நிலைமையைக் கருத்தில்கொண்டு ஆர்ப்பாட்டங்களில் இருந்து விலகிக்கொள்ளுமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடையும் நிலையில், அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் கொரோனா பரவல் அபாயம் மிக மோசமாக அதிகரித்துள்ளது ☞2

## விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு நிதி உதவி

### தியாகி அறக்கொடை நிதியத்தின் இயக்குநர் அன்பளிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

நீண்டகாலமாகச் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்து அண்மையில் விடுதலை செய்யப்பட்ட 15 முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தனியார் ☞2



## மட்டக்களப்பிலிலும் கொரோனா தீவிரம்; மரண எண்ணிக்கையும் திடீரென உயர்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 256 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமையும் துடன் 05 மரணங்களும் ஏற்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் முத்துலிங்கம் அச்சுதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மூன்றாவது கொரோனா அலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இது வரையில் 9 ஆயிரத்து 43 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்றாவது அலையின் தாக்கத்தால் 124 பேர் மரணம் அடைந்துள்ளனர். ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அது புரிந்துகொள்ளத்தக்கதே.

அதே நிலையில்தான் கோட்டாபய அரசும் இருக்கின்றது.

தற்போதைய அரசு அதிகாரத்தைக் கைப்பற்றி நேற்றுடன் ஒருவருடம் பூர்த்தியாகின்றது.

கடந்த வருடம் நீண்ட இழுபறிகளின் பின்னர் இதே ஓகஸ்ட் 8ஆம் திகதிதான் நாட்டில் பொதுத் தேர்தல் நடந்தது.

அதற்கு சற்று முன்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சிக் கூட்டணியின் புதுமுக வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ பெரு வெற்றியீட்டியிருந்தார். அதை அடுத்து கடந்த வருடம் ஓகஸ்ட் 8ஆம் திகதி நடந்த பொதுத்தேர்தலில் மொட்டுக் கட்சிக்கு வரலாற்று வெற்றி கிட்டியது. முன்னெப்போதும் இல்லாதவாறு தனது பங்காளிக் கட்சிகள், நேச தரப்புகளுடன் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்துக்குள் அது புகுந்தது.

அப்படிப் பட்ட ஒரு வெற்றியை ஈட்டிய ஒரு தரப்பின் முதலாவது ஆண்டு நிறைவு என்பது பெரும் ஆரவாரக் கொண்டாட்டங்களுடன் நினைவு கூரப்படும் ஒரு நிகழ்வு.

ஆனால் மொட்டுக் கட்சிக் கூட்டணியில் ஒரு அசுமாத்தமும் கிடையாது. எல்லோரும் பம்மிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதற்கு காரணம் உண்டு.

எவ்வளவு செல்வாக்கோடு மொட்டுக் கட்சி ஆரவாரமாக ஆட்சிக்கு வந்ததோ அதே வேகத்தில் அது மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து வருகின்றது. மொட்டுத் தரப்புக்கு இந்த விடயம் நன்கு தெரியும்.

அபரிமிதமாகக் கிடைத்த மக்கள் செல்வாக்கை படுமோசமான வேகத்தில் இழந்து வரும் அத்தரப்பினர், அந்த அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளவேயில்லை. அந்த அதிர்ச்சிக்கு மத்தியில் தமது ஆட்சியின் முதலாவது ஆண்டு நிறைவை – முதலாவது பிறந்த நாள் விழாவை – கொண்டாடவே அவர்களுக்குத் தோன்றவில்லை.

பெரும் மக்கள் செல்வாக்குடன் அதிகாரத்துக்கு வந்த தரப்பினர், மிக வேகமாக மக்கள் செல்வாக்கை இழந்தனர் என்ற பெருமை இலங்கையில் ராஜபக்ஷக்களின் இந்த ஆட்சிக்குத்தான் கிட்டும்.

★ ★ ★

கொரோனாத் தொற்றுத் தொடங்கிய காலத்தில் ஒரு சொல் அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அது – கொரோனா தொத்தணி.

தொற்று எந்த இடத்தை மையமாக வைத்துக் பரவியதோ அதை ஒட்டி, அப்படிப் பரவும் தொற்றை ஒரு கொத்தணியாகக் குறிப்பிட்டு அடையாளப்படுத்தினோம்.

வெலிசறைக் கடற்படை முகாமில் தொற்றுப் பரவிய போது அதனை 'வெலிசறை கடற்படை முகாம் கொத்தணி' என்றோம். பேலியகொட மீன் சந்தையை ஒட்டித் தொற்றுப் பரவியபோது அதனை 'பேலியகொடை மீன் சந்தைக் கொத்தணி' என்றோம். அதேபோல 'மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை கொத்தணி', 'கந்தக்காடு மறுவாழ்வு மையக் கொத்தணி' என்று பல கொத்தணிகளைக் கண்டோம்.

இப்போது அந்தப் பெயரை – கொத்தணி என்ற சொல்லை – பயன்படுத்துவதை நாம் குறைத்துக் கொண்டு விட்டோம். ஏனென்றால் தொற்று நாடு முழுவதும் பரவி விட்டதே. இனி எப்படித் தனித்தனி கொத்தணிகள் என்று வகுத்துக் கையாள்வது என சுகாதார அதிகாரிகள், மருத்துவர்கள், நிபுணர்கள் தீர்மானித்து விட்டார்கள் போலும். அதனால் கொத்தணிப் பேச்சைக் கைவிட்டு விட்டார்கள்.

என்றாலும் கூட இப்போதும் ஒரு புதிய கொத்தணி தோன்றியிருப்பதைச் சொல்லித்தானாக வேண்டும்.

அது – 'நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொத்தணி', எம்.பிக்கள் பல பேரையும் ஒரே சமயத்தில் இப்போது பதம் பார்க்கத் தொடங்கியிருக்கின்றது கொரோனா வைரஸ்.

இந்த விடயத்தில் ஏழை – பணக்காரன், வசதியுள்ளவன் – வசதியற்றவன் என்று பாகுபாடு பார்க்காமல் – வேறுபாடு காட்டாமல் – எல்லோரையும் ஒன்றாக அரவணைத்திருக்கின்றது கொரோனா வைரஸ்.

புதிய எம்.பிக்கள் கொத்தணி விரிவடையுமா? அடங்கிப் போகுமா? பார்த்திருப்போம்.

– மின்னல் –

## வடமராட்சியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவில் சிகிச்சை பெற்று வந்திருந்த நிலையில் உயிரிழந்தார்.

பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த 54 வயதுடைய ஆண் ஒருவர் இரண்டு நாள்களாக வயிற்றோட்டம் காரணமாக சுகயீனப்பட்டிருந்த நிலையில் நேற்று வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டபோது உயிரிழந்துள்ளார். வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் உயிரிழந்த அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 68 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அவரது அயலில் கொரோனாத் தொற்றாளர்கள் உள்ள நிலையில் சடலத்திலிருந்து மாதிரிகள் பெறப்பட்டு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள இரண்டு சடலங்களின் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைக்காகக் காத்திருப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறை சந்தை மேற்கைச் சேர்ந்த 91வயதுடைய பெண் ஒருவர் உயிரிந்துள்ளார். அவரது அயலில் உள்ளவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக் கப்பட்டுள்ளதால் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அத்துடன், பருத்தித்துறை பஸ் நடத்துநரான 58 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

## யாழில் தொற்றாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் மன்னார் மாவட்டத்தில் 02 பேருக்கும் நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்றும் தேசிய செயற்பாட்டு மையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## விடுவிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் கொரோனாத் தடுப்பு செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா கலந்துகொண்டு உதவித் திட்ட நிதியை வழங்கிவைத்தார்.

தியாகி அறக்கொடை நிதியத்தின் இயக்குநர் வாமதேவா தியாகேந்திரனின் நிதிப் பங்களிப்பில் 15 பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா நிதி வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, யாழ்.மாவட்ட அரச அதிபர், யாழ். பிரதேச செயலாளர், யாழ்.மாவட்ட இராணுவப் படைப்பிரிவுகளின் தளபதிகள் கலந்துகொண்டனர்.

## சகலரும் தடுப்பூசியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களில் 1.5 வீதமானோர் மரணிக்கின்றனர். பெரும்பாலானோர் தீவிர சிகிச்சைப் பிரிவுகளிலும் அனுமதிக்கப்படுகின்றனர்.

எனவே, ஆட்கொல்லி வைரஸிடமிருந்து மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள பின்வரும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு அரச தகவல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

01) அத்தியாவசியமான காரணங்கள் தவிர்ந்த வேறு விடயங்களுக்காக வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்.

02) திருமணங்கள், இறுதி சடங்குகள் மற்றும் பிற விழாக்களில் பங்கேற்பதை முற்றாக நிறுத்தவும்.

03) பொது இடத்துக்குச் செல்லும்போது முகக்கவசம் (மாஸ்க்) அணிவது கட்டாயம்.

04) அறைகள், அரங்குகள், மின்தூக்கி (லிஃப்ட்) மற்றும் வாகனங்கள் போன்ற மூடப்பட்ட பகுதிகளில் கூட்டமாக இருப்பதைத் தவிர்க்கவும்.

05) அவ்வப்போது கைகளைச் சவர்க்காரம் கொண்டு கழுவுவதோடு, மற்றையவர்களிடமிருந்து இரண்டு மீற்றருக்கு மேல் இடைவெளியைப் பேணுங்கள்.

06) நாட்பட்ட நோய்களைக் கொண்டுள்ளவர் வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர்க்க வேண்டும்.

## பிறந்து ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் குழந்தைக்குப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும், அதன்போதே தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனவும் வைத்தியசாலை கொரோனா பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசு முன்னெடுத்துவரும் கொரோனா அறிகுறியற்றவர்களை வீட்டில் வைத்து சிகிச்சையளிக்கும் வகையிலான செயற்பாடுகளுக்குப் பொதுமக்கள் முழுமையான பங்களிப்பை வழங்கும்போதே அதனை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.

டெல்டா தாக்கம் இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்படவில்லை. பொது மக்கள் தமது சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமே இவ்வாறான தொற்றுக்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் – என்றார்.

## கொரோனா நிலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள நியாயமான காரணங்கள் இருந்தாலும், தொற்று நோய்ப் பரவலின்போது ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது நியாயமானதாக அமையாது என்றும் அமைச்சர் சரத் வீரசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

## நேற்று மாத்திரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

487 பேர் குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து நேற்று வெளியேறியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 90 ஆயிரத்து 794 ஆக அதிகரித்துள்ளது.

**வேலைவாய்ப்பு**

சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு - 076 740 3814






# இராணுவமயமாக்கலுக்கு எதிராக நீர்கொழும்பில் போராட்டம்

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாடு முழுவதும் இராணுவமயமாக்கப்படுவதற்கு எதிராக நீர்கொழும்பில் ஒரு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாலை நீர்கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டம் கிறிஸ்தவ ஒற்றுமை இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'கொத்தலாவல சட்டத்தை மீளப் பெறுங்கள். வடக்கு உட்பட நாடு முழுவதும் இராணுவமயமாக்கப்படுவதை நிறுத்துங்கள்' எனக் கோரும் பிரதான பதாதையை ஏந்தியவாறு, அதிபர்கள் ஆசிரியர்கள், அரசியல் ஆர்வலர்கள் கைது செய்யப்படுகின்றமையை எதிர்ப்போம், கல்வியை இராணுவமயமாக்க வேண்டாம், இராணுவமயமாக்கலை எதிர்க்கிறோம்' போன்ற வசனங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

சீருடை அணிந்த ஏராளமான பொலிஸார் போராட்ட இடத்திற்கு அருகில் பணியில் ஈடுபட்டிருந்தனர் என சிவில் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.








# ஒரு நாளைக்கு 150 - 200 உடல்களை தகனம் செய்யும் நிலைமை வரும்

இலங்கையில் ஒரு நாளைக்கு 150 - 200 உடல்களை தகனம் செய்யக்கூடிய வசதியை ஏற்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டதாக பேராசிரியர் சுனேத் அகம்பொடி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கொரோனா நிலைமைகள் தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். டெல்டா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் இலங்கை அரசு துணிச்சலான முடிவை எடுத்தது. இந்த சவாலின் ஒரு பகுதியாக ஒரு நாளைக்கு 150 - 200 திறன் கொண்ட வெகுஜன தகனம் செய்யும் வசதியை உருவாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுனேத் அகம்பொடி, ரஜரட பல்கலைக்கழகத்தின் மருந்துவ பீடப் புற்றுநோயியல் துறை பேராசிரியரும் தொற்றுநோயியல் நிபுணர் மற்றும் ஆராய்ச்சியாளர் என அனைவராலும் நன்கு அறியப்பட்டவராவார்.












காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வேலிக்கு சாட்சியாகும் ஓணான்

நாட்டில் சுயாதீனமாக இயங்க வேண்டிய அமைப்புகள் பலவும் இப்போது பக்கம் சார்ந்து – சாய்ந்து – செயற்படுகின்றன. நிறைவேற்றதிகாரம் எதை விரும்புகின்றதோ அதைச் செய்கின்றன, அதையே கூறுகின்றன, அதையே முடிவாகவும், தீர்ப்பாகவும் அறிவிக்கின்றன.

இதுதான் நாட்டின் இன்றைய இழிநிலைமைக்குக் காரணம். ஜனநாயக ஆட்சி முறைமை கேள்விக்கும் கேலிக்கும் உரியதாக மாறிவருவதற்கு சில கட்டமைப்புகள் தமது தனித்துவத்தையும், சுயாதீனத்தையும் துணிச்சலுடன் பேணாமல், அதிகாரத்துக்கும் அழுத்தத்துக்கும் அஞ்சி நடப்பதே முக்கிய காரணம்.

சில சட்ட இக்கட்டுகள் இருப்பதாலும், பாதுகாப்பு இல்லாததாலும் பல விடயங்களை நாம் வெளிப்படையாகப் பேச முடியாது என்பது உண்மைதான். யதார்த்தம்தான்.

ஆனால், மறுபக்கத்தில் தங்களினதும் தாம் சார்ந்த துறைகளினதும் தனித்துவத்தையும், சுயாதீனத்தையும் பேணுவதற்காக விசேட சிறப்புரிமைகள் பெற்ற அந்தத் தரப்புகள் , அந்தச் சிறப்புரிமைகலைக் கவசமாகப் பயன்படுத்தி, அத்துறையின் சுயாதீனத்தையும் தனித்துவத்தையும் பேணுவதை விடுத்து, நிறைவேற்றதிகாரத்துக்கும் ஆட்சித் துறைக்கும் இசைவானதை – விருப்பமானதை – நிறைவேற்றுவதற்கு இசைந்து போகின்றன.

ஒரு வகையில் இது விலைபோகும் சின்னத்தனம்தான். அத்துடன் மட்டும் அமைவதில்லை. அத்தகைய தவறுகளைச் சுட்டிக் காட்டி, உண்மையை அம்பலப்படுத்த முயலும் ஊடகங்கள், தரப்புகளை அடக்கவும் தமக்குரிய சிறப்புரிமைகளை ஓர் ஆயுதமாக அவை பிரயோகிக்கின்றன.

குறிப்பாகவும், வெளிப்படையாகவும் சொல்வதானால் –

தாங்கள் சார்ந்த துறையின் தனித்துவம், சுயாதீனம், பெருமை, கீர்த்தி போன்றவற்றை எல்லாம் தங்களின் உத்தியோக உயர்வு உள்ளிட்ட சுயநலத் தேவைகளுக்காக விட்டுக் கொடுத்து ஆட்சி அதிகாரத்துக்குத் தவறான முறையில் துணை போகும் இத்துறையினர், அந்த உண்மைகளை அம்பலப்படுத்தும் ஊடகங்களுக்கு எதிராக மட்டும் தங்களின் சிறப்புரிமையை – அதிகாரத்தை – பயன்படுத்தப் பின்நிற்பதில்லை.

பதினொரு அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கப்பம் அறவிடுவதற்காக மட்டுமே கடத்தப்பட்டு, பின்னர் காணாமலாக்கப்பட்டனர். அந்த வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதிக்கு எதிரான குற்றச்சாட்டுக் குறித்து மேலதிக விசாரணையைத் தொடர்வதில்லை என்ற சட்டமா அதிபரின் முடிவை இத்தகைய நடவடிக்கையில் ஒன்றாகவே, ஜனாதிபதி சட்டத்தரணியும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகள் தொடர்பில் சபாநாயகரே கேள்விக்குட்படுத்தலாம், பிற – வெளித் தரப்புகள் அவற்றுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாது என்ற சிறப்புரிமை இருப்பதால் இத்தகைய அத்துமீறல்கள் குறித்து எம்.பிக்களால் சபையில் துணிச்சலுடன் குரல் எழுப்ப முடிகின்றது. நாடாளுமன்றப் பேச்சாக நாம் அவற்றை பத்திரிகைகளில் பிரசுரிக்க முடிகின்றது.

இதே தரப்புகளைப் போன்றே நாட்டின் புலனாய்வுப் பிரிவும் செயற்படுகின்றது போலும்.

கொவிட் தொற்றுத் தடுப்புத் தொடர்பான தேசிய செயலணியின் கூட்டத்தில் நாட்டின் புலனாய்வுப் பிரிவு தெரிவித்த கருத்தும் கூட இத்தகைய ஒன்றாகவே நோக்கப்பட வேண்டியுள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த மாதத்தில் இடம்பெற்ற 120 ஆர்ப்பாட்டங்களே கொவிட் தொற்றுப் பரவல் தீவிர மடையக் காரணம் என்று விஞ்ஞான ஆய்வு நடத்திக் கண்டு பிடித்தவர்கள் மாதிரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சுட்டிக் காட்டியிருப்பதுதான் நகைப்புக்கிடமானது.

நாட்டை முடக்குங்கள், மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்தைத் திறக்காதீர்கள், அரச ஊழியர்கள் அனைவரையும் ஒரே சமயத்தில் வேலைக்கு அழைக்காதீர்கள் என்று பல்வேறு விடயங்களை அவசரப்பட்டுச் செய்ய வேண்டாம் என்று மருத்துவ, சுகாதார நிபுணர்கள், ஆய்வாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எல்லோரும் கூறக் கூற, அவற்றை எல்லாம் ஒரு காதால் வாங்கி, மறுகாதால் வெளிவிட்ட மாதிரி, ஆட்சிப் பீடம் புறமொதுக்கி, விட் டேத்தியாக நடக்கின்றது.

அத்தகைய தாராளப் போக்கினால் – பொறுப்பற்ற செயற்போக்கினால் – தீவிரமடையாத கொரோனா, மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை வெளிப்படுத்தியமையால் மட்டுமே தீவிரமடைந்து விட்டது என்று புலனாய்வு அதிகாரிகள் கூறுவது நகைப்புக்கிடமானது.

ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ கூட்டிய கூட்டத்தில் நாட்டின் புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதிக்குப் பிடித்த மாதிரி இப்படி ஆராய்ச்சித் தகவலை – கண்டு பிடிப்பை – வெளியிடுவது வேலிக்கு சாட்சி ஓணான் என்ற கதைதான்.

# எந்த நோயாளியையும் சங்கடத்துக்கு உள்ளாக இடமளிக்க வேண்டாம்!

## ஜனாதிபதி கோட்டா அறிவுரை



கொவிட் நோய்த் தொற்றின் அறிகுறிகளுடன் வைத்தியசாலைகளுக்கு வருகின்ற எந்தவொரு நோயாளியும் சங்கடத்துக்கு உள்ளாவதற்கு இடமளிக்க வேண்டாமென, சுகாதாரப் பிரிவு பிரதானிகளுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

கொவிட் நோய்த் தொற்று அறிகுறிகள் காரணமாக, கொழும்பு உள்ளிட்ட சில பிரதான நகரங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நாளாந்தம் வருகை தருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு வருகை தருகின்ற நோயாளர்களின் நோய்த் தொற்றை உறுதி செய்துகொள்ளும் போது ஏற்படுகின்ற நெரிசல் காரணமாக, அவர்கள் சங்கடங்களுக்கு ஆளாகக் கூடாதென, ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சில பிரதான நகரங்களுக்கு அண்மையில், மேலதிக சிகிச்சை நிலையங்கள் பலவும், கடந்த மாதங்களுக்கு முன்னரே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. எந்தவோர் அவசர நிலையிலும் தொற்றாளர்கள் சங்கடத்துக்கு ஆளாவதைத் தடுப்பதற்காகவே அந்நிலையங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக, நோய்த் தொற்று அறிகுறிகள் காணப்படுகின்றவர்கள், முதலாவதாக மேலதிக சிகிச்சை நிலையங்களுக்கும் பின்னர் நோயாளியின் நிலைமையை அவதானித்து வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைப்பதன் அவசியத்தையும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தடுப்பூசி ஏற்றல் மற்றும் எதிர்காலச் செயற்றிட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடும் கொவிட் தடுப்பு விசேட குழுவுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் பொதுமக்கள் சங்கடத்துக்கு ஆளாவதைத் தடுப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் திட்டமிடுவதற்கு, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் நேரடியாகப் பங்களிப்புச் செய்யவேண்டும் என்றும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கு அவசியமான வழிகாட்டல்களை ஊடகங்கள் மூலம் பொதுமக்களுக்குத் தொடர்ந்தும் அறிவுறுத்தல்களை வழங்குவது, சுகாதார நிபுணர்களின் பொறுப்பாகுமென்றும், ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இரண்டாவது தடுப்பூசியை வழங்குகின்ற எந்தவொரு மத்திய நிலையத்திலும், 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான முதலாவது தடுப்பூசியை வழங்குவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும், செப்டெம்பர் மாதத்துக்கு முன்னர் இரண்டு தடுப்பூசிகளையும் வழங்கக்கூடிய அளவுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. மூன்றாவது தடுப்பூசியை வழங்க வேண்டி ஏற்பட்டாலும், அதற்கும் அரசாங்கம் தயாராக உள்ளது. இருப்பினும், நோய்த் தொற்று பரவுவதைத் தடுப்பதற்காகப் பொது மக்கள் வழங்குகின்ற பங்களிப்பு குறைந்துள்ளமை கவலைக்குரியதாக உள்ளதென, விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன சுட்டிக்காட்டினார்.

கடந்த மாதத்தில், நாடு பூராகவும் 120 ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், குறைந்தது 1,500 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டிருந்தனர். சுகாதாரப் பரிந்துரைகளைப் பின்பற்றாது இவ்வாறு பொது மக்கள் ஒன்றுகூடுவது, நாடு பூராகவும் வேகமாக கொவிட் நோய்த் தொற்று பரவுவதற்கு காரணமாகியுள்ளதென்று, புலனாய்வுத் துறையினர் சுட்டிக்காட்டினர்.

கொவிட் நோய்த் தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பலர், தேசிய ஔடதங்களை தினந்தோறும் பயன்படுத்துகின்றனர். அது, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்குக் காரணமாய் அமைந்துள்ளது. தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டாலும், தேசிய ஔடதங்களை தினம்தோறும் பயன்படுத்தல் மற்றும் முகத்துக்கு நீராவி பிடித்தல் போன்றவை, நோய்த் தொற்றுக்குள்ளாவதைத் தடுப்பதாக, சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

அமைச்சர்களான காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, கெஹலிய ரம்புக்வெல்ல, ரோஹித்த அபே குணவர்தன, ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, சிசிர ஜயகொடி நாடாளுமன்ற உறுப்பினர் மதுர வித்தானகே, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் வைத்திய நிபுணர் சஞ்ஜீவ முனசிங்க, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன ஆகியோரும் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகளும், இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# கிளிநொச்சியில் மனித எச்சங்கள் தொடர்ந்து அகழ்வுப்பணி முன்னெடுப்பு

கிளிநொச்சியில் மனித எச்சங்கள் காணப்பட்டமை தொடர்பாக சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை, விளாவோடையிலுள்ள வயல் காணியை சீரமைக்கும்போது குறித்த எச்சங்களை அவதானித்த காணி உரிமையாளர், பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். அதன்பின்னர், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி லெனின்குமார் அப்பகுதியைச் சென்று பார்வையிட்டதுடன், மேலும் எச்சங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அகழ்வு பணிகளை முன்னெடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை காலை, நீதிவான் முன்னிலையில் ஆரம்பமான குறித்த பணி, சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் டனுசன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் பொதியிடப்பட்டதுடன் அகழ்வு பணிகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சபாநாயகரைச் சந்தித்தார் நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர்



இலங்கைக்கான நியூஸிலாந்து தூதுவர் மைக்கல் அப்பெல்டன் மரியாதையின் நிமித்தம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 38

ந.வித்தியாதரன்



பாலசிங்கம், அடேல் திருமணத்தின்போது

எழுபதுகளின் தொடக்கத்தில் இடதுசாரிகளுடன் சேர்ந்து பெரு வெற்றியீட்டி ஆட்சிக்கு வந்த சிறிமாவோவின் ஐக்கிய முன்னணி அரசு, இப்போதைய அரசைப் போலவே குறுகிய காலத்திலேயே மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க ஆரம்பித்தது.

எஸ்.டி.சிவநாயகம் ஐயா – இரத்தினசிங்கம் இணை முன்னின்று நடத்திய 'தினபதி' மட்டுமல்லாமல் அந்த குடும்பத்தைச் சேர்ந்த சிங்கள நாளிதழான 'தவஸ', ஆங்கில நாளிதழான 'சன்' மற்றும் அவற்றின் வாரப் பத்திரிகைகளான முறையே 'சிந்தாமணி', 'ரிவிரஸ', 'வீகெண்ட்' எல்லாமே சிறிமாவோவின் ஆட்சியை ஒரு பிடி பிடித்துத் தள்ளின.

எதிர்ப்புக்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க முற்பட்ட சிறிமாவோ ஆட்சி இந்தப் பத்திரிகைகளை வெளியிடும் 'இண்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்' நிறுவனத்தையே சீல் வைத்து இழுத்து மூடியது.

மூன்று ஆண்டுகள் - 1977 வரை - இந்தத் தடை நீடித்தது. இதனால் நிறுவனமே தாக்குப்பிடிக்க முடியாமல் துவண்டு போனது. சம்பளம் இல்லாமல் ஊழியர்கள் பிற தொழில்கள், நிறுவனங்களை நாட வேண்டியவர்களானார்கள். அப்படியான பலருக்கும் எஸ்.டி.எஸ். ஐயா தனது தொடர்பாடல்கள், ஊடாட்டங்கள் மூலம் அரச, தனியார் வேலைகளை முனைப்பாகப் பெற்றுக்கொடுத்தார். அச்சமயத்தில்தான் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் தனது அரசியல் பிரிவில் பத்திரிகைத்துறை ஊடாட்டங்களைக் கையாள்வதற்கு – விசேடமாகத் தமிழும், ஆங்கிலமும் தெரிந்த – அதிகாரி பதவிநிலைக்கு ஒருவரைத் தேடியது.

வேலையிழந்திருந்த கே.கே.இரத்தினசிங்கத்தை – எப்போதுமே தம்முடன் தமக்கு உதவியாளராகப் பயணித்து இருந்தவரை – இந்தப் பொறுப்பை ஏற்பதற்கு விண்ணப்பிக்குமாறு சிவநாயகம் ஐயா வழிப்படுத்தினார். கே.கே.ஆர். விண்ணப்பித்தார். நேர்முகப் பரீட்சையில் நெருக்கடியின்றித் தேர்வானார்.

ஊடகத்துறையில் ஏற்கனவே நன்கு அனுபவம் மிக்க இரத்தினசிங்கம் ஆங்கிலம், தமிழ் ஆகிய விடயங்களை செய்திகளில் செவ்வனே கையாண்டு கொழும்பில் இருந்த பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகளின் நம்பிக்கையையும் பாராட்டையும் பெற்றுக் கொண்டார்.



இளம் எஸ்.டி.எஸ்

அப்படி இருந்த சமயத்தில்தான் 1977 மீண்டும் தினபதி குழுமம் மீதான தடை நீக்கப்பட்டு, அது மீளப் பிரசுரமாகும் நிலைமை ஏற்பட்டது.

உடனே இரத்தினசிங்கம் தமது பதவி விலகல் கடிதத்துடன் பிரிட்டிஷ் தூதரகத்தில் தனது மேலதிகாரிகளிடம் சென்றார். அவர்களுக்கோ ஆச்சரியம். அங்கே, அந்தப் பத்திரிகை நிறுவனத்தில் அவர் பெறும் - பெறக் கூடிய - சம்பளத்தின் சரியாக இரண்டு மடங்கு தூதரகத்தில் அவருக்கு. மேலும் மேல் அதிகாரிகளின் முழு திருப்திகரமான பணி. இளவயது இரத்தினசிங்கத்தின் பல எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் 'பார்ட்டிகள்' அவ்வப்போது நடைபெறும் 'திருத்தலம்' அதுதான். அத்தகைய பணியை விட்டு விலகுவதா, ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்தியுங்கள் என்றனர் மேலதிகாரிகள். தங்களது எதிர்பார்ப்புக்கும், சில, பல சமயங்களில் அதைவிட அதிகமாகவும், திருப்தியாகப் பணிபுரியும் இரத்தினசிங்கத்தை இழக்க அவர்கள் விரும்பவில்லை.

எனினும் இரத்தினசிங்கம் விடாப்பிடியாக ஒற்றைக்காலில் நின்றார். சிவநாயகம் ஐயாவின் வலதுகரமாக - தினபதியில் துணை ஆசிரியராக – மட்டும் பணிபுரிவது அவரின் ஒரே நோக்கமாகவும், இலக்காகவும், விருப்பமாகவும் இருந்தது.

கடைசியில் அவரது தூதரக மேலதிகாரிகள் ஓர் இணக்கத்துக்கு வந்தனர். சரி, நீங்கள் விலகுவதானால் விலகுங்கள், ஆனால் உங்கள் இடத்துக்கு, உங்கள் மாதிரித் திறமையான - தமிழ், ஆங்கிலம் நன்கு தெரிந்த – ஒருவரைப் பரிந்துரைத்து, ஏற்பாடு செய்து தந்து விட்டுப் போங்கள் என்பதுதான் அந்த நிபந்தனையுடன் கூடிய கோரிக்கை.

தலையாட்டி விட்டு வந்த இரத்தினசிங்கம் தமது தலைவரான - இராமனான – சிவநாயகம் ஐயாவுடன் வந்து கலந்து ஆலோசித்தார்.

இருவரும் மேற்படி பிரிட்டிஷ் தூதரகத்தில் பணியாற்றுவதற்கு ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கம் பொருத்தமானவர் என்று தீர்மானித்தனர். தமது மேற்படிப்புக்கும் வாழ்வுக்கும் நல்ல வருமானமுள்ள தொழிலை எதிர்பார்த்து இருக்கின்றார் ஸ்ரனிஸ்லஸ். ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் நல்ல பரிச்சயமும் திறமையும் உள்ளவர். தத்துவவியல் விடயங்களிலும் ஆழமான சிந்தனை கொண்ட அவருக்கு அதுதான் பொருத்தமான பணியாக இருக்க முடியும் என்று சிவநாயகம் ஐயா தீர்மானித்தார்.

இருவரும் பாலசிங்கத்தை அழைத்தனர். வீரகேசரியைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதால் நீங்கள் மேலே வரமுடியாது, இரத்தினசிங்கம் பிரிட்டிஷ் தூதரகத்தில் நல்ல வேதனத்துக்கு – உயர்ந்த சம்பளத்திற்கு ஆற்றிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று பாலசிங்கத்தை ஆற்றுப்படுத்தினார் சிவநாயகம் ஐயா.

ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கத்தை பிரிட்டிஷ் தூதரகத்துக்குக் கூட்டிச் சென்ற இரத்தினசிங்கம், அங்கு அதுவரைத் தாம் வகித்த பொறுப்பை பாலசிங்கம் ஏற்றுக்கொள்ளவும் ஏற்பாடு செய்தார். இது 70 நடுப்பகுதியை ஒட்டி நடந்தது.

பாலசிங்கம் பிரிட்டிஷ் தூதரகத்தில் பணியாற்றிய தொடங்கிய காலத்திலேயே அங்கு பணிபுரிந்து கொண்டிருந்த இளம் கிறிஸ்தவத் தமிழ்ப் பெண் ஒருவரை விரும்பினார். காதல் கடி மணத்தில் அது முடிந்தது.

அச்சமயத்தில் பிரிட்டிஷ் தூதரகத்தில் நான்கு வருடங்கள் பணியைப் பூர்த்தி செய்த நம்மவர்களுக்கு பிரிட்டன் செல்வதற்கான விஸா வழங்கும் சிறப்புரிமையை தூதரகம் அளித்தது. திருமதி பாலசிங்கம் ஏற்கனவே நான்கு வருடங்கள் சேவையை பூர்த்தி செய்து இருந்தமையால் அந்தச் சிறப்புரிமை விஸாவைப் பெறும் தகுதி அவருக்கு கிட்டியது. ஆனால், பாலசிங்கம் தூதரகப் பணியில் நான்கு வருடங்களைப் பூர்த்தி செய்யவில்லை. எனினும் லண்டன் சென்று தத்துவவியல் துறையில் மேற்படிப்புப் படித்துப் பட்டம் பெற விரும்பினார் ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கம். அதற்காக விண்ணப்பித்தார். பாலசிங்கம் தம்பதியினரின் விஸா விண்ணப்பங்களை ஒன்றாகப் பரிசீலித்த தூதரக அதிகாரிகள், தங்களுக்கு மிக தெரிந்த – தங்கள் தூதரகத்தில் பணியாற்றும் – தம்பதியினர் இருவருக்கும் எந்தவித ஆட்சேபனையும் இன்றி விஸா வழங்கினர்.

எழுபதுகளின் பிற்பகுதியில் இந்த வாய்ப்புடன் லண்டன் பறந்தனர் பாலசிங்கம் தம்பதியினர். அங்கு நீரிழிவு நோயினால் பாதிப்புற்ற திருமதி பாலசிங்கம் கடும் சுகவீனத்திற்கு உள்ளானார். அவரின் சிறுநீரகங்கள் பழுதடைந்ததால் அடிக்கடி டயாலிசிஸ் செய்ய வேண்டிய நெருக்கடி. படுத்த படுக்கையாக இருந்த தனது காதல் துணைவியாரை நீண்ட காலம் அங்கு பேணி, பராமரித்து உதவினார் பாலசிங்கம் என்று தெரிந்தவர்கள் கூறுவார்கள்.

அச்சமயம் லண்டனில், தாதியர் சேவைப் பயிற்சியிலிருந்த - அடேல் என்ற – ஆஸ்திரேலியாவைப் பூர்விகமாகக் கொண்ட – தமது இருபதுகளின் ஆரம்பத்தில் இருந்த - பெண்மணியை கண்டார் பாலசிங்கம். தமது துணைவியாரைப் பராமரிக்கும் பணிக்காக வந்து போன தாதியான அடேலுடன் பாலசிங்கத்துக்கு அப்போது பரிச்சயம் இருந்தது.

சில காலத்தில் திருமதி பாலசிங்கம் காலமானார். தமது துணைவியார் இறுதி விருப்பப்படி பெரும்பொருள் செலவையும் பொருட்படுத்தாது அவரது பூதவுடலை இலங்கைக்கு கொண்டு வந்து துணைவியாரின் குடும்ப மயானத்தில் (நீர்கொழும்பில் அது இருந்ததாக பாலா அண்ணன் கூறியதாக நினைவு உண்டு) அதனை நல்லடக்கம் செய்து, நினைவுத்தூண் எழுப்பினார் பாலசிங்கம். அதன்பின் தாம் கலாநிதி பட்டப்படிப்பை மேற்கொண்ட லண்டன் பல்கலைக்கழகத்தில் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, அங்கு மாணவியாக வந்து சேர்ந்த அடேலுடன் மீண்டும் ஊடாட்டம் தொடங்கி, அது காதலாகப் பரிணமித்து, எளிமையான திருமணத்தில் முடிந்தது.

அன்று முதல் பாலா அண்ணன் இறக்கும் வரை – கடைசி நிமிடம் வரை – ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாத ஆதர்ச தம்பதியராக அன்ரன் பாலசிங்கம் – அடேல் பாலசிங்கம் இணையரின் அற்புத வாழ்வு அமைந்தது.

இருவருடனும் நான் நெருங்கி நண்பனாக – ஏன் பிள்ளை போன்று -பழகியிருக்கிறேன். அவர்கள் ஒருவரை ஒருவர் சுடுசொல் கொண்டு கடிந்தமையைக் கூட நானறியேன்.

எந்த விடயத்திலும் தனது துணையின் நலன், சிரத்தை, கவனிப்புக் குறித்து இருவருமே மிக அவதானமாக, உற்ற துணையாக இருந்தமையை நான் அவதானித்திருக்கின்றேன்.

பின்னாளில் விடுதலைப் புலிகளுடன் தம்மை இணைத்துக் கொண்ட அந்த தம்பதியரின் வாழ்க்கைப் பாதை மலர் படுக்கையாக இருந்து விடவில்லை. மாறாக, கொந்தளிப்பு மிக்க கொடூர யுத்தங்களையும், நினைத்துப் பார்க்க முடியாத நெருக்கடிகளையும் கொண்டமைந்தது அது. அதில் ஒருவரை மற்றவர் எந்த சமயத்திலும் விட்டுக் கொடுக்கவே இல்லை.

ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கம் பிரிட்டிஷ் தூதரகத்தில் பணியாளராகச் சேர்வதற்கு சிவநாயகம் – இரத்தினசிங்கம் இணை வழிகோலியது. அந்த புதிய வேலையே பாலசிங்கத்தின் திருமணப் பாதையைத் தீர்மானித்தது. அவர் லண்டனுக்குப் பயணம் ஆகி பிரிட்டிஷ் பிரஜையாக வழி செய்தது. அந்த வாழ்வுதான் பின்னாள்களில் அடேல் பாலசிங்கம் திருமணத்துக்கும், ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமாக உயரவும் கூட காரணமாயிற்று.

இந்த வகையில் பாலா அண்ணனின் வாழ்வுத் திருப்பத்தில் சிவநாயகம் ஐயாவின் பங்களிப்பு முக்கிய பங்கு வகுத்திருக்கின்றது.

இந்த முத்தரப்பினர் இடையே – எஸ்.டி.எஸ். ஐயா, இரத்தினசிங்கம், பாலா அண்ணன் இடையே – நடைபெற்ற ஊடாட்டங்கள் குறித்து சிவநாயகம் ஐயா மூலம் நான் ஏதும் அறியவில்லை. மற்ற இருவருடனும் பிற்காலத்தில் ஆண்டுக் கணக்கில் பேசிப் பழகி உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதன் தொகுப்பு தான் மேலுள்ள விடயங்கள்.

இது சிவநாயகம் ஐயாவின் நூறாவது ஆண்டு. எனவே அவரின் நினைவுப் பகிர்வை இப்படி விவரித்து – விரித்து – செல்கிறேன் நான்.

வாசகர்களையும் என்னோடு பயணிப்பதன் மூலம் அந்தப் பெருந்தகை – ஊடக ஜாம்பவானை – ஒரு தடவை நினைவு கூரும்படி வேண்டுகிறேன்.

(வளரும்.....)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 92

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 277.தூதுவர் பிளேக் கூறியவற்றை ஏற்றுக் கொண்டீர்கள்?

நாங்கள் ஏற்றுக் கொள்வது வேறு. அது அவர்களது யதார்த்தம். சிங்கள அரசாங்கங்களின் வழமையான ஏமாற்றுதல்களைச் சொல்லி, இங்கு என்ன நம்பிக்கைகள் உண்டு என வினாவினேன். அவர் சொல்லியவை யதார்தமாகபட்டது. தற்சமயம் தமிழ் மக்களிடையே எந்த ஓர் அரசியல் தலைமையும் விடுதலைப் புலிகளுக்கு மாற்றாக இல்லை. அமெரிக்காவில் தமிழ் மக்களுக்காக பிரதிநித்துவம் செய்பவர்கள் 90 வீதம் விடுதலைப் புலிகளை மீறி எதுவும் செய்யமுடியாதவர்களாகவே இருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளால் தமிழ் மக்கள் தங்களது அரசியல் ஆதரவுகளை கூட - இந்தியா உட்பட - இழந்து விட்டார்கள். தான் எத்தனையோ ராஜதந்திரிகளிடம் பேசியிருப்பதாகவும் முக்கியமாக இந்திய அதிகாரிகளுடன் சந்திரிகா தீர்வுகள் பற்றி பேச்சுக்கள் தொடங்கியபோது ஈடுபட்டதில் அவர்கள் விடுதலைப் புலிகள் பார்த்துக் கொள்ளட்டும் என்றே இருக்கிறார்கள் எனச்சொன்னார். மேலும் சம்பாசணைகளில் அவர் கூறியவற்றை நான் அறிந்திருந்தாலும், குருஷேத்திரத்தில் கர்ணனையும் மற்ற உறவினர்களையும் கொல்ல அர்ஜுனன் தயங்கியபோது கண்ணன் தந்த பகவத்கீதை போல் நெஞ்சை சுட்டது. நான் கேட்டுப் படித்து வளர்ந்த கீதை, ஆனால் அமெரிக்கர் ஒருவரின் வாயினால் கேட்க வேண்டியிருந்தது.

இந்தியா ஏற்படுத்திய ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் புறக்கணித்து, போரினால் தமிழீழம் தான் தமது நோக்கம் என்று அறிவித்தார்கள்.

அந்த சமயம் சில மதிப்பு வாய்ந்த, ஆளுமை நிறைந்த தமிழ் தலைமை இருந்தது. ஆனால் ஆயுதங்களால் அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டார்கள்.

பின்னர் அவர்கள் பிரேமதாஸாவினோடு பேச்சுவார்த்தைக்கு சென்றபோது, மரியாதைக்குகூட அல்லது அரசியல் சாணக்கியத்திற்காவது இந்தியாவுடன் ஓர் இணைப்பை உருவாக்கி, ஆதரவை கேட்கவில்லை. அந்த பேச்சு வார்த்தைகளையும் போரை முன் னெடுக்கவே பாவித்தார்கள். அது மட்டுமல்ல ஸ்ரீலங்காவிடமே ஆயுதங்களை வாங்கி இந்திய படைகளை தாக்கினார்கள்.

அதை விடுங்கள், பின்னர் ஒரு நேச நாடான நோர்வே பேச்சுார்த்தைகளுக்கு இணங்கி வந்தபோது, அவர்கள் ஊடாக முதலில் இந்தியாவை இவற்றுக்கு ஆதரவு கோரியிருக்கவேண்டும். நோர்வே பிரதிநிதிகள் ஸ்ரீலங்காவிற்கு வந்துவிட்டு, முதலில் சர்வதேச நிலைகளை அறிந்து இந்தியாவிடம் தான் போனார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் புறமுதுகு காட்டி விட்டு நின்றார்கள்.

தான் பேசிய நோர்வே அதிகாரிகள் தாங்கள் இந்தியாவுடன் நேரடி உறவை வளர்க்க உதவிசெய்யக் கோரினாலும் அவர்கள் அதனை அக்கறைப்பட்டு முன்னெடுக்கவில்லை என்றார்.

அப்படியே இப்பொழுதும் தனித்தே நிற்கிறார்கள். கடைசி சந்திரிகா தர ஒற்றுமைப்பட்டதை அன்றில் மஹிந்தா நேரடியாக பேசுவோம் என்று தந்த அழைப்பை ஏற்றுப் பேசபோய், இந்த யுத்தத்தை தவிர்த்திருக்கலாம்.

ஆனால் விடுதலைப் புலிகள் ஒரு படி மேலேபோய் இப்படிதான் பேச வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்கள். அதனால் அவர்கள் ஒரு தனித் தமிழீழம் தவிர்ந்த ஒரு சமாதானத்துக்கு வருவார்கள் என்று நம்பிக்கை சர்வதேசத்துக்கு இல்லாது போயிற்று.

மஹிந்ததான் ஜனாதிபதி. தென்பகுதி மக்களின் நம்பிக்கையோடு பதவிக்கு வந்திருக்கிறார். அவரோ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படாமல் எந்த ஒரு திட்டத்தையும் அமுல்படுத்தமாட்டேன் என்றும், விடுதலைப் புலிகளுக்கு பேச்சுவார்த்தைக்கு கொடுக்கப்பட்ட அழைப்புகள் இனிமேல் இல்லை என்றும். அப்படி ஏதும் கொடுத்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவது முழுமூச்சாகப் போரை நடத்தும் இராணுவத்தின் மன உறுதியை பாதிப்பதால் அதனை செய்ய மாட்டேன் என்றும் கூறுகிறார். பிரயோசனமிருந்து, விடுதலைப் புலிகளும் தீர்வுக்கு வர இணக்கம் காட்டினால் அதை நிர்ப்பந்தித்து பேசிப் பார்க்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் அவற்றை காலம் கடத்தவே பாவிப்பார்கள் என்ற எண்ணமே அவர்கள் மனதில் உண்டு. அதனால் நம்பிக்கைகள் குறைவு.

எனக்கு என்னவோ அவரது வார்த்தைகள் என்னவோ காண்டீபம் எடுத்தாயிற்று இனி அது முடிக்கப் படாமல் வைக்கப்படமாட்டாது என்றுதான் தோன்றியது.

அவர் நீங்கள் இவற்றை இந்திய அதிகாரிகளுடனும் பேசவேண்டும் என்று சொன்னதின் ஆர்வத்தில் மேலும் சிலவற்றை விசாரித்தேன்.

### 278. அவற்றில் ஏதும் தெளிவு இருந்ததா?

அப்பொழுது – சில மாதங்களுக்கு முன் – ஜனவரி 2009இல் பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றிருந்தார். அவர் தனது கொள்கைகளாக "பயங்கரவாதத்துக்கு எதிரான போர்" என்பது வித்தியாசப்படுத்தி எடுக்கப்படவேண்டும், சித்திரவதை முகாம்கள் தொடருவது மனிதாபிமானமல்ல எனத் தேர்தல் காலங்களில் பரப்புரைகள் செய்திருந்தமையால் அவற்றை ஒட்டி அமெரிக்க நிலையில் விடுதலைப் புலிகளை அரசியல் போராளிகளாக – ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலை வீரர்களாக – வித்தியாசப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் உண்டா என்ற அங்கலாய்ப்பை சொன்னேன்.

ஒபாமா இப்பொழுதுதான் பதவி ஏற்றுள்ளார். இவையெல்லாம் மீளாராயப்பட்டு மாற்றங்கள் வர வருடங்களாகலாம். ஆனால் முதலில் தமிழ் மக்கள் இந்தியாவுடன் நிலைப்பாடுகளை சமன் செய்ய வேண்டும். இந்தியாவை ஒட்டிதான் அமெரிக்கா என்ன, மற்ற நாடுகளும் தமது கணிப்பை மேற்கொள்ளும். விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை ஒபாமா தடுப்பார் என தான் நினைக்கவில்லை என்றும், இடைப்பட்ட மக்களுக்கு ஏற்படக்கூடிய இணை அழிப்புகளும் உயிர் அழிவுகளுமே, திருமதி கிளின்டனுக்கு (அப்போது அவர் நாட்டின் வெளி விவகார அமைச்சராக, பலம் வாய்ந்தவராக இருந்தார்) கரிசனையாக உள்ளது என்றும், தற்போது மக்களைப் புலிகளை எப்படி பிரித்தெடுப்பது என்பதிலேயே எல்லோருடைய கவனங்களும் இருக்கின்றன என்றும் கூறப்பட்டது. ஆனால் மஹிந்தாவும் போரை முன் தொடராத படி பலமான அழுத்தங்கள் வருமுன் அதனை முடித்து விடவே விரும்பி காரியங்கள்





செய்திருப்பார். பாராக் ஒபாமா வெல்லுவார் என்ற ஆரூடங்கள் இருந்தன. அவர் 2008 இலேயே தெரிவாகி விட்டார். ஆகவே ஸ்ரீலங்காவும் அவற்றைக் கண்கெடுத்துத் தனது திட்டங்களை மேற்கொண்டிருந்தது. ஆகவே கால நேரங்கள்தான் முக்கியம் பெறும் என விளக்கினார்.

### 279.இந்திய, பிரித்தானிய நோர்வே, ஆஸ்திரேலியா, கனடா போன்ற பார்வையாளர்களின் நோக்கம் எதுவாக இருந்தது?

அவர்களது அபிப்பிராயங்களும் மஹிந்த விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைத் தொடர்ந்து அவர்களை அழிக்காமல் விடப்போவதில்லை. இவ்வளவு உதவிகள் இருந்து விடுதலைப் புலிகளின் ஆயுதப் பலம் சீரழிக்கப்பட அதில் வரும் சன்மானங்களை அவர் விடப்போவதில்லை. விடுதலைப் புலிகளும் இணங்குவதாக இல்லை. ஆகவே இது பலப் பரீட்சையின் ஒரு முடிவாகவே அமையும். கள நிலையையும் சர்வதேச ஒருமைப்பாட்டையும் உற்று நோக்குங்கள். ஸ்ரீலங்கா எப்படி வலை பின்னியிருக்கிறது என்று பார்க்க விடுதலைப் புலிகளும் இந்த பின்னல்களை பற்றி ஏதும் தீவிரமான ஆலோசனையின்றி தங்களது கரும்புலிகளின் தாக்கங்களால் கள நிலைகளை மாற்றமுடியும் என கணக்கெடுத்திருக்கிறார்கள். அது தவறு என சுட்டிக்காட்டினார்கள். எங்கள் குழு எங்களிடையே ஆராய்ந்ததில் அந்த நிதர்சனம் புரிந்தது. இந்தியாவும், பாகிஸ்தானும், சீனாவும் ஒன்றையொன்று பகையாளிகள். அவர்கள் ஆதரவு கொடுக்கிறார்கள். அமெரிக்கா ஈரானோடு பகையாளி, சீனாவோடு நட்பில்லை. ஆனாலும் அவற்றைப் பாராட்டாது உதவி தருகிறது. ஈரான், ஜோர்தான் போன்ற மத்திய கிழக்கு நாடுகள் இஸ்ரேலுடன் கீரியும் பாம்பும்போல. அவர்கள் எல்லாம் ஸ்ரீலங்காவுக்காக களத்தில் நின்றார்கள். அத்தோடு பிரித்தானியா, ஜேர்மன் என மேலைத்தேய நாடுகள் அவற்றோடு பெரிதளவில் நட்பு பாராட்டாத ரஷ்யாவும் தங்களது அமெரிக்க நிலைப்பாட்டையும் பொருட்படுத்தாது எல்லோருடனும் நிற்கிறார்கள். விடுதலைப் புலிகளுக்காக சர்வதேசத்தில் நோர்வே மனிதாபிமான ரீதியில் குரலெழுப்பினாலும் ஆயுத உதவி அன்றில் மற்றவர்களை எதிர்த்து அரசியல் நிலைப்பாடு எடுக்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை.

விடுதலைப் புலிகளை முறியடிக்க இவ்வளவு நாடுகளும் சேர்ந்து நின்று காரியமாற்றுகிறார்கள். அப்படியானால் விடுதலைப் புலிகள் தங்களது தீரத்தாலும் திடசித்தத்தாலும் எவ்வளவு சரித்திர காவியங்களை இராணுவ ரீதியில் படைத்திருக்கிறார்கள். தமிழ் மக்களின் அபிலாஷைகளை, உணர்வுகளை உலகில் முத்திரை பதித்து இருக்கிறார்கள் என்று நாம் மார் தட்டிப் பெருமை கொள்ளலாம். அது நியாயமானது தான். ஆனாலும் அப்படியான ஓர் அழிவைத் தடுத்து நிறுத்தி சமயோசிதமாக, புத்திசாலித்தனத்தால் முன்னேற எங்களது சமுதாயத்தில் புத்திஜீவிகள் இருக்கவில்லை. அல்லது அவர்களும் பிடிவாதங்களின் முன்னே பராமுகமாகவே இயலாத்தனத்தில் இருந்து விட்டார்களா என்பதுதான் மனம் வருந்தும் கேள்வி. சர்வதேசம் எங்களை ஏமாற்றி விட்டது என்றுதான் கூக்குரல் போட்டோம் – எங்களது உள்ளங்கைகளை நாம் பார்க்கவில்லை.

(வளரும்)

# RADIANT DAWN

A Sunday Suplement in English to Kalaikkathir

Page I | Sunday the 8th of August 2021

To Advertise Here Contact 0764438622

## Conspectus

No one can remain unconcerned about the truobles the county is beset with. The fuel price hike, ban on the import of chemical fertilisers due to lack of foreign reserves and the economic crisis the government has declared as unprecedented in 73 years are a few ills that needs to be remedied. All these problems have been aggravated by the Covid-19 pandemic that has carried away valuable lives. The authorities and the agencies concerned are doing their best to combat the killer virus.

Everyone wonders how and when we are going to yank the nation out from the morras into which it has fallen. Let us all hope for the best and the sooner these problems are overcome the better it would be for everyone.

The closure of schools and the disruption of the children's education is not a matter of lesser importance.More than 1.5 million children and young people have been affected worldwide. Many of them are now reliant on on-line classes for learning as well as socialising. Spending more time on virtual platforms can leave the children vulnerable to exploitation by unwanted elements. School closure and strict preventive measures mean more and more students are relying on technology and digital solutions for learning , entertainment and connected to outside world, but not all children have the necessary knowledge, skills and resources to keep themselves safe online.

As millions of children have temporarily shrunk to their homes and glued to their screen, we must help them surmount this drudgery. We , the publishers of *Kalaikkathir* have ventured to bring out a Sunday Supplement named *Radiant Dawn* in order to instill in the children and grown ups the habit of reading for fun as well as for information and entertainment.

We fervently beleive that the contents on the four pages would go a long way in helping the readers in dpenfing their times in a usefull manner. They can enhance their knowledge and acquire the language proficiency required for further studies and work.

Page 1 of Radiant Dawn presennts the readers with the news digest of the current topics. On page 2 the readers, especially the students are provided with variety of activities that can help them to write error free sententances. They are so designed to make the students focus their attention on the nuances of gramatical and structral aspects.

Page 3 is allocated to publish the creative writings of the students. the articles, riddles and puzzles on this page will certainly encage the readers and inspire them to improve their writing skills and boost their cretative ability.

Readers intrested in sports and games fined their updates on international and local events on page 4.

We welcome your comments for improvement and earnest support and coorpration to encourage us in our worthy endeavour.

**- Publishers -**

# Teachers Take it to the Street...



The Sri Lankan public school teachers' "online learning" strike has now entered its fifth week. Teachers are demanding a salary increase, abolition of existing "salary anomalies" and withdrawal of the Kotelawala National Defence University Act (KNDUA).At the joint teachers protest outside Colombo Secretariat on July 23 over 200,000 teachers across the country were involved. The stricke was called by the Ceylon Teachers Union (CTU), Ceylon Teacher Service Union, United Teachers Union and several other unions.

The teachers unions were forced to call the "online learning" strike after police brutally suppressed a protest against the KNDUA on July 8. Several participants, including CTU General Secretary Joseph Stalin, were arrested and detained at an Air Force-controlled quarantine centre.

The KNDUA has been presented to parliament by the defence ministry and will be debated in early August. If passed, it will give the military-controlled tertiary institution, more private fee-paying courses. This is seen as a move towards the privatisation of education and the militarisation of society.

Teacher union officials and others were released in the face of widespread anger over the police crackdown. The unions have been compelled to continue the national strike, because teachers are determined to win their long-standing demands.

On July 24, Trade Minister Bandula Gunawardena told the media that the government spends 86 percent of its revenue on state employees' salaries and a teachers' wage rise was "impossible, given the depth of the economic crisis induced by the pandemic."

If the government granted teachers' salary demands, it would have to increase taxes and burden the people, he declared, in an attempt to pit other workers and the poor workers against the teachers.

## Only biodegradable lunch sheets from August 01



Mahinda Amaraweera

The Ministry of Environment has taken steps to ban the production and distribution of polythene lunch sheets in Sri Lanka from August 01. Accordingly, only biodegradable lunch sheets can be used for food wrapping after August 01 and only those lunch sheets can be manufactured in factories in the country, distributed and sold.

At present there are 08 companies in Sri Lanka that produce biodegradable lunch sheets and the Minister of Environment Mahinda Amaraweera had extensive discussions with its representatives in this regard.

The industrialists pointed out that it costs three times more to produce these fast-decomposing lunch sheets than lunch sheets made of polythene. They also requested the government to provide tax relief for this purpose. However, the Minister instructed the Central Environmental Authority to immediately provide a report to him on their problems to present in the Cabinet.

The Minister also stated that if it is reported that the companies that obtain licenses for the production of biodegradable lunch sheets have produced polythene lunch sheets, the licenses issued to those companies will be revoked immediately in the first instance.

Several more decisions were reached at the meeting as follows:

Increase the fine for production, distribution and sale of polythene lunch sheets to Rs. 100,000. (Current fine is Rs. 10,000) Grant one month grace period to polythene lunch sheet manufacturing companies. The Minister requested the representatives of these companies to support the government's plan to reduce the use of polythene and plastics to mitigate environmental and health problems in the country.

## West faces dilemmas over tanker attack



Angry words are being traded, diplomats are being summoned to foreign ministries and threats of retaliation made public after a deadly drone attack on a merchant tanker last week. Britain, the US and Israel all blame Iran, which has vehemently denied it while vowing a severe response to anything that harms its interests. So what exactly happened and what's behind this?

On Thursday 29 July the MV Mercer Street, a medium-sized fuel tanker, was sailing without cargo off the coast of Oman on its way from Dar Es Salaam in Tanzania to the UAE refuelling port of Fujairah on the Gulf of Oman. The vessel is Liberian-flagged and Japanese-owned but operated by an Israeli-owned company, Zodiac Maritime.

Late in the day the tanker was struck by an explosive-laden Unmanned Aerial Vehicle, or drone, that exploded close to the bridge, damaging the nearby living quarters. Two people were killed - a Romanian and a British security guard - and after putting out a mayday distress radio call the tanker was then escorted to port by two US Navy warships.

Boris Johnson has said Iran must "face up to the consequences of its actions" calling it "an unacceptable and outrageous attack on commercial shipping".

Iran's Ambassador to the UK, Mohsen Baharvand, was summoned to the Foreign Office to be told his country must immediately cease actions that threaten international shipping. Iran has issued an angry denial, demanding to see proof of its alleged complicity in the attack. Its foreign ministry has issued its own summons to Britain's Chargé d'Affaires in Tehran, calling the accusations made by Britain, Israel and the US "baseless propaganda".

**Reading is to the mind what exercise is to the body - Richard Steele -**

## Read the story and answer the questions

Dayan was a sailor.He lived in England.He was often away with his ship. He came back home one summer morning. He found many new vneighbours around his house .They had a pretty daughter.Dayan fell in love with her.He promised to marry her. Then he went back to Africa. He sent her a pretty parrot. She wrote back to him. " It's tastier than a chicken; thank you for the parrot.

1. Where is Dayan from?
   ..................................................................
2. What is he?
   ..................................................................
3. When did he come back home?
   ..................................................................
4. What did he find around his house?
   ..................................................................
5. Who did he fall in love with?
   ..................................................................
6. What did he promises to do?
   ..................................................................
7. Where did he go back?
   ..................................................................
8. What did he send his lover?
   ..................................................................
9. What did his lover write back to him?
   ..................................................................
10. What do you think of that pretty girl?
    ..................................................................

## Read the poem and answer the questions

### UNCLE ALBERT

**When I was almost eight years old**
**My uncle Albert came to stay,**
**He wore a watch-chain made of gold**
**And sometimes he would let me play**
**With both the chain and the gleaming watch,**
**And though at times I might be rough**
**He never seemed to bother much.**
**He smelled of shaving soap and snuff.**
**To me he was a kind of God,**
**Immensely wise and strong and kind**
**And so I thought it rather odd**
**When I came home from school to find**
**Two strangers,menacing and tall,**
**In the parlour, looking grim**
**As Albert- suddenly quite small-**
**Let them rudely hustle him**
**Out to where a black car stood.**
**Both Albert and his watch and chain**
**Disappeared that day for good.**
**My parents said he'd gone to Spain.**

**-VERNON SCANNEL-**

1. Write the two lines of the poem which show that the uncle was patient.
   ..................................................................
   ..................................................................
2. This boy liked his uncle very much. Write the two lines which show that.
   ..................................................................
   ..................................................................
3. Who were the two strangers that the boy found in the parlour.
   ..................................................................
   ..................................................................
4. Write down the word that rhymes with snuff.
   ..................................................................
5. Write down the word which show that Uncle Albert will not return.
   ..................................................................
   ..................................................................

## 1 An Exercise for Grade 5 and 6 children

Fill in the blanks with the cries of the animals.

caws, crows, neighs, bellows, quacks, barks grunts, cackles, bleats, mews

1. A dog ................, Bow! Vow ! Vow!
2. A cat .................. ,Mew! Mew! Mew!
3. A cow .................., Moo! Moo! Moo!
4. A lamb ................., Bha! Bha! Bha!
5. A horse ............., Neigh! Neigh! Neigh!
6. A pig. .............., Grunt! Grunt! Grunt!
7. A hen .............., Clucks!, Clucks!Clucks!
8. A cock ................., Cock! Cock! Cock!
9. A crow ................., Caw! Caw! Caws!
10. Aduck................, Quack! Quack! Quack!

## 3.An exercise on vocabulary for grades 11, 12 and 13

Read the following sentences carefully. Then rewrite them replacing the words highligted with a better word from the list below.

chatting/ dining/ glancing/ jotting/ relaxing/ relishing/ rushing/sipping/ skimming/ toiling/

1. Kamal is **drinking** a nice cup of coffee.
2. Mohan is **eating** his dinner with spicy crab curry.
3. Meena is **looking** at the headlines of the paper.
4. Rohan is **talking** to Manisha with greate joy.
5. The farmers are **working** hard in the field.
6. Dad is **resting** after a hard days work.
7. The children are **having their dinner** at the restaurant.
8. Myna is **reading** the important points in the case file.
9. The students are **taking down** the main points of the lecture.
10. The doctor is **going out quickly** to his clinic to see a patient critically ill.

## 2. Fill in the blanks with the correct prepositions given in th box.

with to on of over into in for before at

1. Lydian is very good .................. at his piano.
2. The old man died ................of cancer.
3. I am not interested................. politics.
4. Sri Lanka is well known ............... it's tea and rubber.
5. We depend ................ Middle East countries for or oil needs.
6. My boss is angry............... me for arriving late.
7. The police is investigating ................ the murder case.
8. We must play the game according ............. the rules.
9. All men are equal ................. the law.
10. India and China have a long .............

1 Answers:-
1. barks / 2. mews / 3. bellows / 4. bleats/ 5.neighs/ 6. grunts/ 7. cackles / 8. crows/ 9. caws/ 10. quacks/

2 Answers:-
1. at / 2. of / 3. in / 4. for/ 5.on / 6. with/ 7. into / 8. to / 9. before/ 10. over

3 Answers:-
1. sipping / 2. glancing / 3. relishing / 4. chatting/ 5.toiling / 6. relaxing/ 7. dining / 8. skimming / 9. jotting/ 10. rushing

## 4. Fill in the blanks with the correct collective nouns given below

[army/ band/ bench/ cabinet/ choir/ crew/ gang/ party/ staff/ team/]

1. An ............... of 1000 soldiers paraded on the Independence Day.
2. The captain of the ship and his ...................of 200 sailors arrived at the Colombo port.
3. A ................... of workers are reapairing the railway lines.
4. A.................. of musicians played the national anthem at the Independance Square.
5. A................... of tourists visited the Sigiriya Rock Fort last Sunday.
6. We have a................. of thirty ministers in our parliament.
7. Our football coach handed the list of names of the .................of players to the Principal.
8. Our school has an efficient ....................of forty teachers.
9. A ................of five judges will hear the case at the supreme courts.
10. A..............of ten singers will sing at the church this evening.


Answers:-
1. army / 2. crew/ 3. gang / 4. band/
5.party/ 6. cabinet/ 7. team / 8. staff/
9. bench/ 10. choir/

## Read the text and label the diagram.

# How do we breathe?

All animals breathe by taking in oxygen. It involves a quite complicated process. When a person breathes in , air passes into the body through a passage called" the upper respiratory tract." This starts with the **nose**. Here , particles which could be harmful to the lungs are stopped or strained out. The nose also warms the air.

From the nose the air turns down through the funnel shaped **" pharynx"** which is a common area for the air and the food that passes into the food pipe. The the air then passes into the **"larynx"** or the voice box.Then the air goes down the **"trachea"** or the wind pipe . From there ,the air goes through the two smaller tubes branching called the **" bronchi"**, one of which enters each **lungs**.



The lungs are large ,soft organs.Around the entire lungs is a thin covering called **"the pleura"**.The lung tissue is like a fine sponge in some ways. But in the lungs there are spaces, or air sacks, and it is here air is received from the bronchi; the needed gases are used, and unwanted gases are forced out.These air spaces are called **"alveoli**."

The air we take in contains oxygen, nitrogen, carbon dioxide, and water vapour.These same gases are present in the blood as well but in different amounts. When a fresh breath is drawn in, there is more oxygen in the **"alveolai** than in the blood. So the oxygen passes through the very thin walls of the of the blood vessels( capillaries) and into the blood.

Carbon dioxide goes from the blood into the air sacks of the lungs and is exhaled. The exchange of gases enables all the cells to obtain oxygen and to get rid of carbon dioxide.

# An iconic act of sportsmanship at Tokyo 2020




There were wild celebrations in the Olympic Stadium in Tokyo on Sunday after high jumpers Mutaz Essa Barshim and Gianmarco Tamberi agreed to share the gold medal following a tense and dramatic final.

The pair, who are great friends, couldn't be split following an "exhausting two-hour competition". They both cleared 2.37m but had three failures attempting to match the Olympic record of 2.39m.

A Tokyo 2020 official offered them a jump-off to decide the winner, but Qatari Barshim then asked the question: "Can we have two golds?". The official nodded and Italian Tamberi "leaped into his rival's arms, then belly-flopped onto the hard track, rolled around a few times and screamed".

"I look at him, he looks at me, and we know it," Barshim said. "We just look at each other and we know, that is it, it is done. There is no need."

It was the first joint Olympic podium in athletics since 1912 and a "display of sportsmanship that delighted Olympics spectators around the world". It is likely to be remembered as one of the "most heartwarming moments" of the Tokyo games.



# A PIECE OF ADVICE TO DEAR STUDENTS

You can do well in your exams if you are disciplined and methodical when you set out to prepare for your exam. Follow your class lessons regularly and cover the syllabus. After coming back home revise whatever is taught at school in a systematic way. All what you have learnt would be fresh in your mind. Try to answer the questions at the end of each lesson. To become familiar with the format of the question paper and the question models go through the last five years past papers at the least.

If you are stuck, and if doubts arise make sure that the doubts are cleared by your friends, parents or your teachers the next day itself. Do not hesitate to seek help from your teachers and your seniors when required. Take a note of the important formulae you come across in your lessons. You will be able to just grab your note book and and have a glance at the relevant portions. You will be able to look at them frequently to refresh what you have committed to your memory.

Draw a time table for a term exam or for a public exam allocating ample time for the preparation of each subject. Choose the time that you think is the best for your study. It can be early in the morning or in the evening. See that nothing distracts you and mar your studies. Hone your strengths and rectify your weaknesses. Don't venture to study anything new on the subject you are now focussing on because you may be confused.

Eat healthy food and have enough sleep and rest. Make sure that you are not exerting too much. Play a game or two to relax your mind, to recharge yourself for the final day.

- S.SATHIYA -

# *Counterfactual Thinking*



Have you noticed that a bronze medalist is generally more happy than a silver medalist at the end of the game.

Its not incidental finding but proven fact in many research studies after studying reactions of silver medalists vs bronze medalists!

Ideally, a silver medalist should be more happy than the bronze. But, human mind doesn't work like mathematics.

This happens because of phenomenon of counterfactual thinking.

A concept in psychology in which there is human tendency to create possible alternatives to life events that have already happened, that would be contrary to what happened.

Sliver medalist thinks, "Oh I couldn't win the gold medal." Bronze medalist thinks, "At least I got a medal."

*Silver Medal Is Won After Losing, But Bronze Medal Is Won After Winning.*


This happens in our life also, we don't appreciate what we have but feel sad with what we don't have. Let's be grateful for our blessings, they far outweigh our problems if we start counting.

*Life Is After All Full Of Choices, Do Always Count Your Blessings To Stay Positive & Motivated...*

# Albert Einstein

Albert Einstein was born in German Empire,but moved to Switzerland in 1895. In 1879, at the age of 17, he taught mathematics and physics at the Swiss Federal Polytechnic school in Zurich. He graduated in 1900 and became a Swiss citizen. In 1903 got the permanent position at Swiss Patent Office. In 1905 he was awarded his PhD by the Zurich University.He became an American citizen in 1940.

In 1905 Einstein published for research papers of his. These outlined the theory of photoelectric effect, explained Brownian motion, introduced special relativity and demonstrated mass energy equivalence. He the applied his general theory of relativity to model the structure of the universe. He also made important contribution to the development of the theory of quantum mechanics. He was awarded the Nobel Prize in physics . His intellectual achievement and originality Einstein becoming synonymous with genius. He died on April 18, 1955 in the United States of America.





- ந.சதாசிவ ஐயர் -
(ஓய்வுபெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்)

**இன்றைய ஆடி அமாவாசையில் தீர்த்தக் கரைகளை நாடிப்போகாமல் சுகாதார நடைமுறைகளைப் பேணி இவற்றை தவறாது வீட்டிலிருந்தவாறே செய்து எல்லாப் பிதிர் களும் நலம்பெற பிரார்த்தித்து, பிதிர் ஆசிகளை பெறு வோமாக. முடியவில் லையே எனக் கவலை வேண்டாம்.**

# யாவர்க்கும் பிதிர் கடமை செய்வோம்!

அமாவாசை தோறும் இறந்தவர்களுக்காக தர்ப்பணம் செய்யவேண்டும் என்பது நியதி. ஆயினும், ஆடி அமாவாசை என்பது சைவ மக்களுக்கு பிதிர் வழிபாட்டுக்குரிய பிரதான நாளாகக் காலத்தால் அமைந்துவிட்ட ஒன்றாகும்.

உத்தராயண ஆரம்பத்தின் முதல் அமாவாசையான தை அமாவாசையும் தெட்சிணாயன ஆரம்பத்தின் முதல் அமாவாசையான ஆடி அமாவாசையும் விசேடமானதாயினும் ஆடி அமாவாசை பல காரணங்களால் அதிவிசேடமாய் அமைந்துவிட்டடது.

ஆடி அமாவாசையன்று கீரிமலையில் மாவிட்டபுரத்தான் தீர்த்தோற்சவம் காணுவதாலும், தீர்த்தக்கரையில் நீராடி தர்ப்பணம் செய்வது விசேடம் என்பதாலும், ஆடி அமாவாசையை அடுத்து உலகப் பெருந்திருவிழாவான நல்லூரான் உற்சவம் தொடங்குவதாலும், முன்பின்னாக பட்சங்களின் அமைவைப் பொறுத்து துர்க்கை அன்னை, செல்வச்சன்னிதி போன்ற பிரசித்தமான ஆலயங்களின் திருவிழாக்கள் அமைவதாலும், தொடர்ந்து புரட்டாதி, ஐப்பசி மாதங்கள், நவராத்திரி, கௌரிநோன்பு கந்தசஷ்டி விரதங்கள் தொடர்வதாலும், சைவப்பெருமக்களின் சமயலறைகள் ஆடி அமாவாசைக்கு முதல் சமையல் பாத்திரங்களையும் சமையல் முறைகளையும் சைவ மணம் கமழ்வதாய் மாற்றிக்கொள்வது வழக்கமாகும்.

ஆடி அமாவாசைக்கு முதல் நாள் சந்தைகளில் எல்லாம் புதிய சட்டிபானைகள், பாத்திரங்கள் விற்பனையில் களை கட்டும். மரக்கறி வியாபாரமும் களை கட்டும். இத்தனை பெருமைவாய்ந்த இந்த வருட ஆடி அமாவாசை தினம் இன்று ஞாயிற்றுக்கிழமையாகும். இன்றைய கொரோணா பாதிப்பால் இக்கட்டான காலகட்டத்தில் உள்ள மக்களாகிய நாங்கள் தற்போதய ஆலயத் திருவிழாக்களிலும் சந்தைகளிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் கூடிய எண்ணிக்கையில் ஒன்றுகூடி நமக்கும் சமூகத்துக்கும் சிரமத்தை ஏற்படுத்திக்கொள்ளாது பாரத்துக்கொள்ளல் நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

அந்த வகையில் இன்றையஆடி அமாவாசை தினத் தையும் காலநிலைக்கு ஏற்ப எமது சமய சம்பிரதாயங்களை ஓரளவு அனுசரித்து நிறைவேற்றுதல் எம் ஒவ்வொருவரதும் கடமையாகும். ஆடி அமாவாசைக்கு முதல்நாள் சென்று சட்டி பானைகளையும் பாத்திரங்களையும் சந்தைகளில் கூடி நின்று விற்பதையும் வாங்குவதையும் தவிர்க்க வேண்டியதாயிற்று.

தனிமைப்படுத்தப்படுத்தல் விதிகளை நாம் சரிவரப் பின்பற்றாமல் விட்டால் நாமும் சிரமப்பட்டு மற்றவர்களையும் சிரத்துக்குள்ளாக்கி ஆடி அமாவாசை பிதிர்க்கடனையும் முறைப்படி செய்ய முடியாமற் போகலாம்.

பொதுவாகத் தகப்பன் இல்லாதவர்கள் அமாவாசை விரதமிருந்து தர்ப்பணம் செய்யவேண்டும் என்பது சமய நியதியாகும். எனினும். மாதந்தோறும் செய்ய இயலாதவர்கள் ஆடி அமாவசையன்று பக்குவமாக சிரத்தையுடன் செய்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி, கீரிமலை தீர்த்தத்துக்கு எழுந்தருழுவதால் கீரிமலை கடலில் நீராடி தர்ப்பணம் செய்வது சிறப்பாக அமைந்தது.

அதேபோன்று பல இடங்களிலும் கடற்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் குளக்கரைகளிலும் அக்கிராமத்து ஆலய சுவாமிகள் வந்திருந்து தீர்த்தமாடி மக்கள் ஆடிஅமாவாசை பிதிர்க்கடன் செய்து வழிபாட அருள்பாலிப்பது வழக்கமாகும். அங்கு செல்லமுடியாதவர்கள் அருகில் உள்ள ஆலயங்களுக்கு சென்று தர்ப்ப ணம் செய்தும் தானம்கொடுத்தும் விளக் கேற்றியும் வழிபடுவது வழக்கமாகும். வீடுகளில் சகோதரங்கள் ஒன்றுகூடி பக்குவமாய் கழுவி மெழுகி சமைத்து காகத்துக்கு வைத்து பகிர்ந்துண்ணுவதும் வழக்கமாகும்.

ஆனால் இன்று தவிர்க்கமுடியாத ஓர் இக்கட்டான சூழ்நிலையில் வாழ்கின்றோம். ஆதலால் காலத்திற்கேற்றவாறு வீட்டில் பலர் ஒன்று கூடாமல் அவரவர்கள் வீட்டிலேயே எமது சமய சம்பிரமாயங்களைப் பேணவேண்டியதற்கமைய காலையிலேயே அவரவர் வீட்டு கிணற்று நீரிலே கங்கையையும் சமுத்திரதீர்த்தத்தையும் மனதிற்கொண்டு நீராடி, அருகில் உள்ள ஆலயத்திற்கு சென்று, கூட்டம் கூடாமல் விரைவாக செய்யவேண்டிய கடமைகளை செய்து வீடுவந்து ஆற அமர சமைத்து படைத்து காகத்துக்கு வைத்து சாப்பிட்டு விரத பூர்த்தி செய்வதே பொருத்தமானதாகும்.



இறந்து போன பெற்றோருடனும் அவர்வழி மூன்று சந்ததியுடனும்

## இன்று ஆடி அமாவாசை விரத நாள் பொறுப்புணர்ந்து அனுஷ்டிப்போம்!

தர்ப்பணம் முடிந்து விடுவதில்லை. தர்ப்பணமுடிவில் இறந்துபோன உறவினர்கள், குரு, நண்பர், அன்புக்குரியவர்.... இப்படி எல்லோருக்கும் நன்மை யுண்டாகட்டும் என எள்ளும் நீரும் விடுகிறோம். புரட்டாதியில் மாளயம் செய்யும்போதும் இப்படி ஒரு பிண்டம் வைப்போம்.

இங்கே தற்போது முக்கியமாக சிந்தித்துச் செயற்பட வேண்டிய ஒரு விடயமும் உண்டு. நினைவு கூரப்படவேண்டியவர்கள் எனப்படுபவர்கள் உரிய தினங்களில் உரிய இடங்களில் பொதுவெளிகளில் விளக்கேற்றி நினைவு கூருதல் என்பதோடு நின்றுவிடுதல் பொருத்தமன்று. அவர்களும் பிதிர்கள்தான். அவர்களும் நற்கதியடையவேண்டும். அவர்களுக்கும் தர்ப்பணம் செய்யப்பட வேண்டும். எள்ளும் தண் ணீரும் இறைக்கப்படவேண்டும்.

குடும்பம் குடும்பமாகப் போனவர்களுக்கு நீரிறைக்க யாருமில்லை என்ற நிலையன்றி நாமிருக்கிறோம் எனும் நிலை வேண்டும். நாதியற்ற குடும்பங்களுக்கும் இந்நாளில் அவர்கள் தம்மாலியன்றதை செய்ய உதவு வோம். இந்த ஆடி அமாவாசை நாளில் அவர்களையும் தனியாகவும் பொதுவாகவும் நாமும் நினைந்து தர்ப் பணம் செய்வோமாக. நான் இதனை உணர்வுபூர்வமாக குறிப்பிடவில்லை. சாஸ்திர பூர்வமாகவே குறிப்பட விரும்புகிறேன்.



பிராம்மணர்கள் தினமும் சந்தியாவந்தனம் செய்வார்கள். அதன்பின் ப்ரம்மயக்ஞம் எனும் தர்ப்பணத்தை செய்வர். அதில் இறுதியாக ‘சர்வ பித்ரூன் தர்ப்பயாமி’ என சொல்லி நீர்விடுவர். இதன்பொருள் எல்லாப் பிதிர்களுக்கும் நன்மையுண்டாகட்டும் என்பதே.

அதேபோல் அமாவாசை தர்ப்பணம் செய்யும்போது இறுதியில் எவருக்கு இந்த பூமியில் பிதிர்க்கடன் செய்வதற்கு யாருமில்லையோ அவர்களுக்கும் நான்விடும் இந்த எள்ளும் தண்ணீரும் நன்மையளிக்கட்டும் எனும் பொருள்தரும் மந்திரத்தைசொல்லி எள்ளும் நீரும் இறைப்பர். இதேபோன்ற பொருள்தரும் மந்திரம் பிராமணர்கள் அல்லாதவர்கள் செய்யும் தர்ப்பணத்தின் இறுதியிலும் உண்டு. எத்தனை ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே எத்தனை பக்குவமாக இது வகுக்கப்பட்டுள்ளது என அறிவீர்களா?

ஆதலால் இன்றைய ஆடி அமாவாசையில் தீர்த்தக் கரைகளை நாடிப்போகாமல் சுகாதார நடைமுறைகளைப் பேணி இவற்றை தவறாது வீட்டிலிருந்தவாறே செய்து எல்லாப் பிதிர்களும் நலம்பெற பிரார்த்தித்து, பிதிர் ஆசிகளை பெறுவோமாக. முடியவில்லையே எனக் கவலை வேண்டாம். யாவர்க்குமாம் இறைவர்கோர் பச்சிலை.

# புரிந்துகொள்ளும் முயற்சியில் கஞ்சத்தனம் வேண்டாமே!


ப்ரியமாதா டயஸ்

ஒருவருடன் எந்த அளவிற்கு நெருக்கமான உறவு வைத்துக் கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களோ, அந்த அளவிற்கு அவரை புரிந்துகொள்ளவும் நீங்கள் முயற்சி செய்யவேண்டும். அவரை நன்றாகப் புரிந்துகொள்ளும் போதுதான் அவர் உங்களுக்கு இன்னும் நெருக்கமான, அன்பான உறவாக ஆகிறார். அவர் உங்களை நன்றாகப் புரிந்து கொண்டிருந்தால், இந்த உறவின் அழகை, நெருக்கத்தின் ஆனந்தத்தை அவர் உணர்வார். இதுவே நீங்கள் அவரை நன்றாக புரிந்து வைத்திருந்தால், நீங்கள் அந்த நெருக்கத்தின் இன்பத்தை உணர்வீர்கள். உங்கள் துணைவரின் தேவைகளை, தடைகளை, திறன்களை அறிய முயற்சி செய்யாமல், அவர் உங்களைப் புரிந்துகொண்டு நீங்கள் விரும்புவது போலவே எப்போதும் நடக்கவேண்டும் என்று எதிர்பார்த்தால், பின் பிரச்சினைகள் மட்டும்தான் மிஞ்சும்.

ஒவ்வொருவரிலும் நல்லதும் இருக்கும், கெட்டதும் இருக்கும். இதைப் புரிந்துகொண்டு அரவணைத்தால், அந்த உறவை உங்களுக்கு வேண்டியது போல் நீங்கள் உருவாக்கிக் கொள்ளலாம். ‘இல்லை... அவருக்குப் புரிந்ததுபோல் செயல்படட்டும்’ என்று விட்டுவிட்டால், நடப்பவை அவ்வப்போது தற்செயலாக மட்டும்தான் உங்களுக்கு வேண்டிய வகையில் நடக்கும். உங்கள் துணைவர் பெருந்தன்மையோடு இருந்தால், உங்களுக்கு எல்லாம் சாதகமாக இருக்கும். இல்லையென்றால், அந்த உறவு முறிந்து போகும். இதற்கு அர்த்தம், உங்கள் துணைவருக்குப் புரிந்து கொள்ளும் திறன் அறவே இல்லை என்பதல்ல. ஆனால் அவர் உங்களை நன்றாக புரிந்துகொள்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உங்களின் ‘புரிதலை’க் கொண்டு நீங்கள் உருவாக்க முயற்சி செய்யலாமே

ஒருமுறை கல்யாணம் செய்தால், அவ்வளவுதான் அதற்குமேல் வேறெதுவும் தேவையில்லை என்று மறந்து போகும் விடயமல்ல இது. அன்றாடம் உயிர்ப்போடு நிகழ வேண்டிய கூட்டு முயற்சி இது. தனித்தனி நபர்களாக இருக்கும் இருவர், சேர்ந்து வாழ முடிவுசெய்து, இருவருக்குமாய் ஒரு வாழ்வை உருவாக்கி, அதில் சந்தோசமாக வாழ்ந்து நல்வாழ்வை உருவாக்கிக்கொள்வது. இப்படி இருவர் சேர்ந்து தங்கள் வாழ்வை ஒன்றாக பிணைத்துக்கொள்வதே தனிஅழகு.

நம் கலாச்சாரத்தில், தங்கள் வாழ்வை இருவர் இணைத்துக் கொண்டதற்கான காரணத்தை அவர்களுக்கு நினைவூட்டும் விதமாக, திருமண பந்தத்தை வருடாவருடம் புதுப்பித்துக்கொள்வார்கள். ‘அந்தநாள்’ மீண்டும் புதிதாய் திருமணம் நிகழ்ந்ததாக கொள்ளப்படும். இல்லையென்றால் காலத்திற்கும் அதில் சிக்கிக் கொண்டுவிட்டது போன்ற உணர்வு வந்துவிடும். இது அப்படியல்ல இது தெரியாமல் சிக்கிக் கொண்டுவிட்ட உறவல்ல.., விழிப்புணர்வோடு நீங்கள் ஏற்படுத்திக் கொண்டது, அதை அவ்வாறே விழிப்புணர்வோடு நடத்திக் கொள்ளுங்கள். உண்மையிலேயே அழகான உறவுகள் மலரவேண்டும் என்றால், அடுத்தவரை நோக்கும் முன், ஒரு மனிதன் முதலில் உள்முகமாய்த் திரும்பி தன்னைத் தானே ஆழமாய் அறிந்து கொள்வது அவசியம். நீங்கள் சந்தோச ஊற்றாக மாறி, அதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பியே உறவுகளை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள் என்றால், எப்படிப்பட்டவருடனும் உங்களுக்கு அற்புதமான உறவு உருவாகிடும். உங்கள் சந்தோசத்தை பகிர்ந்துகொள்வதற்குதான் செல்கிறீர்கள் என்றால், இவ்வுலகில் யாருக்கேனும் உங்களுடன் பிரச்சினை உண்டாகுமா என்ன? நிச்சயம் இல்லை. இன்னொரு மனிதருடன் சேர்ந்து வாழ்வதன் ஆழமான உணர்வை, உன்னதத்தை நீங்கள் உணர வேண்டுமென்றால், அந்த உறவு உங்களைப் பற்றியதாக இருக்கக் கூடாது – அது எப்போதும் உங்கள் துணைவரைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். நீங்கள் இருவருமே இவ்விதமாக எண்ணினால் அப்போது கல்யாணம் என்பது ஒரு ‘அமைப்பு’ என்பதைத்தாண்டி, அது ஒரு சங்கமமாய் உருவெடுக்கும்.

உங்கள் சுகம், சௌகர்யம், சந்தோசம் என எல்லாவற்றிற்குமான ஆதாரமாக உங்கள் துணைவரை நியமித்து, உங்கள் சொர்க்கத்தை உருவாக்க அவரை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்ற கணக்கோடு நீங்கள் திருமணம் செய்திருந்தால், உங்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சும். ‘திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது’ என்பார்கள்... காரணம் பலரும் தங்கள் திருமணத்தை நரகமாக மாற்றிக் கொண்டுவிட்டார்கள்! அடுத்தவரிடம் இருந்து ‘எதை, எப்படி’ப் பெறலாம் என்ற கணக்கின் அடிப்படையில் உங்கள் உறவை உருவாக்கி இருந்தால், அதை எவ்வளவு நுணுக்கமாக நீங்கள் கையாண்டாலும், உழைச்சலும் பிரச்சினையும் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கும். ஆனால் உங்கள் உறவை அடுத்தவருக்கு அர்ப்பணமாக நீங்கள் உருவாக்கினால், எல்லாம் அற்புதமாக இருக்கும்.


## வடக்கில் முதல் 24மணிநேர பல்பொருள் அங்காடி

THARANY supermarket

## தாரணி சுப்பர் மார்க்கெட்

போட்டி போட்டு ஓடிக் கொண்டிருக்கும் வியாபார உலகில் தங்களைத் தனித்துவமாகக் காட்டி நுகர்வோர் மத்தியில் தமக்கான இடத்தினைப் பெற்றுவிடவேண்டும் என்றே இன்றையகால வியாபாரிகள் ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்கு மத்தியில் நுகர்வோரின் தேவைகளை எந்தவித தடங்கலும் இன்றி பூர்த்தி செய்யவும், தங்களுக்குத் தேவையான அனைத்தையும் வேறு இடங்களை நாடாமல் ஒரே இடத்திலே பெற்றுவிடவும் யாழ் நகரின் பிரதான வீதிகளில் முதன்மையான கே.கே.எஸ் வீதியில் இலக்கம் 758, தட்டாதெருச் சந்தி, கே.கே.எஸ் வீதி யாழ்பாணம் என்ற முகவரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது தான் தாரணி சுப்பர்மார்க்கெட் எனப்படுகின்ற பல்பொருள் அங்காடி.

ஒவ்வொரு நாளும், விசேட விலைக்கழிவுகளுடனும், நம்பத்தகுந்த தரமான உற்பத்திப் பொருள்களுடனும் வடக்கில் எந்வொரு பல்பொருள் அங்காடிகளும் கொண்டிராத பரந்த விசாலமான இடப்பரப்பில் பல்வேறு வசதிகளுடனும் ஆரம்பிக்கப்பட்டு முன்னணி சுப்பர்மார்க்கெட்டுகளுக்கு போட்டியாக உருவெடுத்து வெற்றிநடை போட்டுவருகின்றது, தாரணி சுப்பர்மார்க்கெட்.

தமது வேலைகளை யாழ்நகரில் முடித்துவிட்டு வீடு செல்பவர்கள், அடுத்தநாள் சமையலுக்கு தேவையான மரக்கறிகளை கொள்வனவு செய்ய நினைப்பவர்கள், தரமான புத்துணர்ச்சியுடன் கூடிய பழங்களை வாங்க விரும்புபவர்களுக்கென தனியே மரக்கறிகள் மற்றும் பழங்களுக்கான பகுதியும், வீட்டுக்குத் தேவையான அரிசி, சீனி, பருப்பு, மா முதற்கொண்டு பலசரக்குப் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு தனியான பகுதியும், அழகுசாதனப் பொருள்கள், குழந்தைகளுக்கான பொருள்கள், இனிப்புப் பண்டங்கள், ஐஸ் கிறீம் வகைகள், பால்மா வகைகள் என அனைத்துக்கும் தனித்தனி இடங்களை ஒதுக்கி நுகர்வோர் இலகுவில் கண்டறியக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தி நுகர்வோரைக் கவரும் வகையில் காட்சிப்படுத்தலை மேற்கொண்டுள்ளனர்.

இவை அனைத்தையும் தாண்டி சிறப்பம்சமாக, வடக்கில் எங்குமில்லாத வகையில் மக்களின் தேவையை நினைத்தவுடன் பூர்த்திசெய்யும் நோக்கில் கடந்த 04.08.2021 முதல் 24மணிநேரமும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர் தாரணி சுப்பர்மார்க்கெட் நிறுவனத்தினர். இந்த 24 மணிநேர வியாபார சேவை மூலம் யாழ்ப்பாணத்தில் பல இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் எனவும் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

அது மட்டுமல்லாது நுகர்வோரைக் கவரும் வகையில் அவர்களுடைய சுப்பர் மார்கெட் வளாகத்திலேயே தேனீரக வசதியை செய்யவுள்ளதுடன் பல்வேறு புதிய உத்திகளை கையாண்டு தமது வியாபாரத்தை அடுத்தகட்டம் நோக்கி நகர்த்துவதை நோக்காக கொண்டு செயற்படுகின்றனர்.

வியாபாரம் மட்டுமே நோக்காக கொள்ளாமல் இடர்காலத்தில் உதவும் பொருட்டு, பல்வேறு அமைப்புகள் ஊடாக நிவாரணப் பொருள்களை வழங்கி உதவிபுரிந்ததுடன், முடக்க காலத்தில் வீடுகளில் இருந்து பொருள்களை வாங்குவதற்கு இணையம், வட்சப் மூலம் தொடர்பு கொண்டவர்களுக்கு எந்தவிதக் கட்டணங்களும் அறவிடாமல் வீடுகளுக்குத் தேடிச் சென்று பொருள்களை வழங்கி வைத்திருந்தனர்.

பணமே முழுமூச்சு என்று நினைத்து தமது வியாபாரத்தை நகர்த்துபவர்களுக்கு மத்தியில், சமூகநலனுடன் மக்களது தேவைகளை இனங்கண்டு அதற்கேற்ப செயற்படும் தாரணி சுப்பர் மார்கெட் நிறுவனத்தினர் போன்றவர்கள் எமது சமூகத்துக்கு வேண்டப்பட்டவர்களே.


## மாற்றம் என்பது நம்மிலிருந்து தொடங்க வேண்டும்



வாழ்க்கையில் வெற்றிபெற ஒரே ஒரு குறிப்பு தான் அது – உங்கள் இலக்கை நோக்கி உயிரைக் காத்துக் கொள்வது போல் ஓடுங்கள்.

மான் எப்படி சிறுத்தையை விட கொஞ்சம் மெதுவாக ஓடினாலும் பல சமயங்களில் சிறுத்தையிடம் இருந்து தப்பிக்கொள்கிறது?

காரணம், சிறுத்தை மானை விட வேகமாக ஓடினாலும் அது தன் ஒரு நாள் உணவுக்காக மட்டுமே ஓடுகிறது. ஆனால் மான் ஓடுவது தன் உயிருக்காக.

சிறுத்தை மானை துரத்தும் போது, மானை கோட்டைவிட்டால், இன்னொரு மானை பிடிக்க அச் சிறுத்தைக்கு வாய்ப்பிருக்கிறது.

மானுக்கு அப்படி இல்லை. ஒவ்வொரு தப்பித்தலும் சாவின் எல்லை வரை சென்று வென்று வரும் ஒரு சாகசக் கதை.

இரண்டுமே தினமும் ஓடிக்கொண்டு இருந்தாலும் துரத்திக்கொண்டு ஓடும் சிறுத்தைக்கு எப்போதுமே துரத்தப்படும் மான் கிடைப்பதில்லை, மான் சிறுத்தையை விட பலவீனமானதாக இருந்தாலும் கூட,

நாம் பலவீனமாக இருக்கிறோமா என்பது முக்கியமில்லை. நம் முயற்சி எப்போதுமே மானைப் போல் இருக்க வேண்டும்.

உயிரைக் காப்பாற்றி கொள்வதை போல் ஓடினால் உயிர் போகாது. வெற்றியும் அதுபோல் தான் எப்போதும் நம் கையில்தான். அதை எதிராளியோ அல்லது வேறு ஒருவரோ தீர்மானிக்க முடியாது.

# காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழில் வெளியான

# வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் பற்றிய முகநூல் பதிவுகள்

**- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்-**

(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்;இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)



வடக்கு கிழக்கின் தமிழ் மறைமாவட்டங்களை இணைத்து உருவாக்கப்படவுள்ள வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம் பற்றி இன்று அதிகமாகப் பேசப்படும் நிலையில் வட கிழக்கு ஆயர் மன்றம் என்ற கருப் பொருளைத் தெளிவாக்கும் நோக்கிலும், இந்தச் சிந்தனையை வளர்க்கும் நோக்கிலும் 'காலைக்கதிர்' பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழில் கடந்த சில வாரங்களாக பலராலும் எழுதப்படும் ஆக்கங்கள் வெளியாகி வருகின்றன.

இந்த ஆக்கங்களை முகநூலில் பதிவு செய்த போது பலரும் வடக்கு கிழக்கு ஆயர் மன்றத்தை வரவேற்றும் பாராட்டியும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த முக நூல் பதிவுகளைத் தொகுத்துப் பின்னர் ஒரு நேரம் நோக்குவோம் எனத் தெரிவித்து இருந்தோம். அந்த முகநூல் பதிவுகளையே இவ்வாரத்தில் நோக்குகிறோம்.

வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் பற்றிக் காலைக் கதிர் பத்திரிகை கிறிஸ்தவ செய்தி இதழில் வெளிவந்த ஆக்கங்கள்:-

* முதலில் 'தமிழ்ப் பேராயர் தலைமையில் தனி அலகு வடக்கு கிழக்கு மறைமாவட்டங்களுக்கு அவசியம்' (23.05.2021) என்ற கலாநிதி ரூபன் மரியாம் பிள்ளை அடிகளின் ஆக்கம் வெளியானது.

* 'எழுந்தது வலிமையான குரலொன்று' (30.05.2021) என்ற கலாநிதி எஸ்.எம். செல்வரட்ணம் அ.ம.தி கரவையூர் செல்வம் அடிகளாரின் ஆக்கம் அதன் பின்னர் வெளியானது.

* 'தமிழ் மறைமாவட்டங்கள் நான்கையும் ஒன்றிணைத்து ஆழமாகப் பணியாற்ற வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் உதவும்' (06.06.2021) என்ற கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகள், யாழ் மறைமாவட்ட குரு முதல்வரின் ஆக்கம் தொடர்ந்தது.

* 'வட கிழக்கு ஆயர் மன்றமும் நான்கு மறை மாவட்டங்களினதும் கத்தோலிக்க பத்திரிகைகளும்' (13.06.2021) என்ற கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளின் ஆக்கம் வெளியானது.

* தொடர்ந்து 'இலங்கைத் திரு அவையின் வளர்ச்சிப் பாதையில் வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் ஒரு படிக்கல் தான்' (20.06.2021) என்ற மட்டக்களப்பு குரு முதல் வர் ஞானப்பிரகாசம் அலெக்ஸ் றொபேட் அடிகளின் ஆக்கம் வெளியானது.

* பின்னர் 'வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் யாருக்கும் எதிரானதல்ல. அது செயற்பாடு மூலம் தெளிவாக்கப்பட வேண்டும்' (27.06.2021) என்ற கலாநிதி எஸ்.ஜே. இம்மனுவேல் அடிகளின் ஆக்கமும், தொடர்ந்து 'வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் அரசியல் சார்ந்ததல்ல; மாறாக ஆன்மீகம் சார்ந்தது' (04.07.2021) என்ற கலாநிதி எஸ்.ஜே.இம்மனுவேல் அடிகளின் ஆக்கமும், 'ஆயர் தீயோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் முன்வைத்த பதிலை இனிமேலும் தர முடியாது' (11.07.2021) என்ற கலாநிதி எஸ்.ஜே.இம்மனுவேல் அடிகளின் ஆக்கமும் வெளியாகின.

* 'வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் மெது மெதுவாக உருவாகி வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது' (18.07.2021) என்ற எம்.வி.ஈ.இரவிச்சந்திரன் அடிகளின் ஆக்கம் வெளியானது.

* 'இலங்கையின் வடக்கு, கிழக்கு மறைமாவட்டங்கள் இணைந்து தனியான ஆயர் மன்றம் ஒன்று உருவாகுவது காலத்தின் கட்டாயம்' (25.07.2021) என்ற தலைப்பில் அல்பிரட் ஞானராஜா சூசைமுத்து என்பவர் மொன்றியல் கனடாவில் இருந்து ஆக்கம் எழுதியிருந்தார்.

* 'இனங்களுக்கிடையில் ஏற்பட்ட இடைவெளியை நீக்க 'இனி ஒருபோதும் இல்லை' என்ற சமாதான ஆய்வு மையம் ஒன்றை வட கிழக்கு ஆயர் மன்றம் நிறுவும் என்கிறார் மன்றத்தின் செயலரும் யாழ் மறைமாவட்ட குருமுதல்வருமான கலாநிதி பி.ஜே. ஜெபரடணம் அடிகள்' (01.08.2021) என்ற ஆக்கம் வெளியானது.

### வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் பற்றி முகநூலில் வெளியான கருத்துக்கள்

முகநூல் பதிவுகளைத் தொகுத்துப் பின்னர் ஒரு நேரம் நோக்குவோம் எனத் தெரிவித்தபடி வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் பற்றி முகநூலில் வெளியான கருத்துக் களை மாற்றம் எதுவும் செய்யாமல் அப்படியே இதோ தருகிறோம்:-

### புலம் பெயர்ந்து பரிஸ் பிரான்ஸில் வசிக்கும் அன்ரன் செபமாலை

புலம் பெயர்ந்து பரிஸ் பிரான்ஸில் நகரில் வசிக்கும் அன்ரன் செபமாலை என்பவர் 'இது ஒரு முக்கிய விடயம். யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை வடக்கு கிழக்கு ஆயர் மன்றத்தின் தலைவராவார்' எனத் தெரிவிக்கிறார்.

### நெதர்லாந்து தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம்

புலம்பெயர்ந்து நெதர்லாந்தில் வாழும் தமிழ்க் கத்தோலிக்க மக்கள் மத்தியில் கத்தோலிக்க ஆன்மீகப் பணியாற்றும் நெதர்லாந்து தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் 'மிகவும் வரவேற்க தக்க விடயம். இது ஒரு கட்டாய தேவையும் கூட. அதே நேரம் முல்லை கிளிநொச்சி மறைகோட்டத்தை புதியதொரு மறைமாவட்டமாக்குவதும் அவசியமாகும்.' எனத் தெரிவிக்கிறது.

### அருள்நேசன் நேசன்

அருள்நேசன் நேசன் என்பவர் 'தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி இணைக்கப்பட்ட வட கிழக்கு மாகாணம் திட்டமிட்டு பிரிக்கப்பட்டது போல் வடக்கு கிழக்கு தமிழ் ஆயர் மன்ற உருவாக்கலையும் குழப்ப சதி செய்வார்கள்' என்கிறார்.

### றொபேட்றொக்சி

றொபேட்றொக்சி என்பவர் 'கிளி முல்லை மறை மாவட்டமும் உருப்பெற்றால் இன்னும் வலுச் சேர்க்கும் என எண்ணுகின்றேன்' என்கிறார்.

### கனடா றொறென்ரோவில் இருந்து ஜோர்ஜ் அமீர்

கனடா றொறென்ரோவில் இருந்து ஜோர்ஜ் அமீர் என்பவர் முயற்சிக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறார். முகநூலில் தன் அருமையான கவிதைகளால் பெயர் பெற்றவர் ஜோர்ஜ் அமீர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பயஸ் பி அந்தோனிப்பிள்ளை மன்னார்

மன்னாரில் வசிக்கும் பயஸ் பி அந்தோனிப்பிள்ளை எனபவர் தமிழ்த் திருத்தத்துடன் முயற்சிக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறார்.

### பி.டி.பி இரத்தினம்

பி.டி.பி இரத்தினம் அருமையான பதிவு. நல்ல முயற்சி. வாழ்த்துக்கள் - என்கிறார்.

### திரேஸ் மரியதாஸ்

திரேஸ் மரியதாஸ் என்பவர் 'இது மிகவும் நல்லது. எமது மக்களுக்கு இதன் மூலம் மிக நல்ல பணிகளை ஆற்றலாம்' எனக்கருத்து தெரிவிக்கிறார்.

### ஆன் றோகினி யோசவ்

ஆன் றோகினி யோசவ் என்பவர் இவ்வாறு தெரிவிக்கிறார்:- 'மிகவும் நன்றாகச் சொல்லி உள்ளீர்கள் பாதர். இந்த நல்ல பணிக்கு எமது செபங்கள் என்றும் துணை நிற்கும்.'

### இயேசுதாசன் இராசன் குயின்சி - மன்னார்

மன்னாரில் பணியாற்றும் இயேசுதாசன் இராசன் குயின்சி என்பவரின் கருத்து இதுவாகும்:-

'நிச்சயமாய் வடக்கு கிழக்கு... கத்தோலிக்க மக்களுக்கு என்று குரல் கொடுப்பதற்கும் குறித்த பிரிவு மக்களின் தேவைகளை பூர்த்திசெய்வதற்கும்... நமக்கென்று ஒரு தனித்துவம் மற்றும் தலைமைத்துவம் தற்போதைய காலகட்டத்தில் தேவையானது ... எம் கனவு நனவாகப் போவதையிட்டு மிக்க மகிழ்ச்சி ... அத்துடன் இம்முயற்சிக்கு வித்திட்டவர் மற்றும் காரணமாயிருந்தவர் காலம் சென்ற தீயோகுப்பிள்ளை ஆண்டகை என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்... இறைவனின் ஆசீரும் கிடைக்கும் முயற்சியை கைவிடவேண்டாம், வாழ்த்துக்கள்.'

### பிலிப்பீன்ஸ் நாட்டில் பணிபுரியும் திருச்சிலுவை அருட்சகோதரி ஜடா யோசவ்

'ஆயர்களின் அறைகூவலுக்கு உங்கள் குரல் வலுவூட்டுவதாக இருப்பது பற்றி மிகுந்த மகிழ்ச்சி. தமிழ்த் தலைவர்கள் தத்தமது போக்கில் கட்சிப் பிளவுகளுடன் தனி நலம் கருதி செயற்பட்டு வரும் நிலையில் தமிழ் இன விடுதலை எப்படி நனவாகும்? உங்கள் பன்முக ஆற்றல், ஆளுமை, உளவியல், சமூக நலன் கருதும் தூரப்

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

பார்வை இவற்றை பயன்படுத்தி தமிழ் தலைவர்கள் தத்தமது போக்கில் கட்சிப் பிளவுபட்ட நோக்கங்களை விடுத்து தமிழ் இனத்தின் விடுதலை பயணத்தை இதய சுத்தியுடன் முன்னெடுக்க உங்கள் அறிவியல் அனுபவரீதியான முன்னோக்கு கொண்ட இறைவாக்கினர் பணியை தொடர்ந்து முன்னெடுக்க உங்களுக்காக இறைவனை வேண்டுகிறேன்' - எனப் பிலிப்பீன்ஸ் நாட்டில் பணிபுரியும் திருச்சிலுவை அருட்சகோதரி ஜடா யோசவ் அவர்கள் தெரிவிக்கிறார்.

### லிங்கேஸ்வரன் யூடி

'நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார்' - என்கிறார்.

### லனாட் மாட்டீன் அஞ்சலா

லனாட் மாட்டீன் அஞ்சலா 'நல்ல பதிவு நன்றிகளும் வணக்கங்களும் வாழ்த்துகளும்' எனத் தெரிவிக்கிறார்.

### அருள்நேசன் நேசன்

அருள்நேசன் நேசன் அவர்களின் இரண்டாவது பதிவு இதுவாகும். அவர் இது காலத்திற்கேற்ற பதிவு என்கிறார்.

(முகநூல் பதிவுகள் தொடரும்)

# அரசின் தான்தோன்றித்தனமான முடிவுகளே நாட்டின் மிகமோசமான நிலைக்கு காரணம்

## முஜிபுர் ரஹ்மான் காட்டம்



கொவிட் தொற்றால் நாடு மிகவும் மோசமான நிலைக்கு சென்றுகொண்டிருக்கின்ற நிலையில் அதனைக் கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் எந்த வேலைத் திட்டமும் இல்லை. அதனால் நகர அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியை மக்களின் உயிரைப் பாதுகாக்க ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல்லாவிட்டால் நகரம் அழகாகும்போது அதனை அனுபவிக்க மக்கள் இருக்காது சவக்குழிகளே இருக்கும் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற, குடிவருவோர் குடியகல்வோர் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் வாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

முதலாவது கொவிட் அலையைக் கட்டுப்படுத்திய போது அதுதொடர்பில் அரசாங்கம் பெருமை அடித்து கொண்டு, பாரியளவில் விளம்பரப்படுத்தி வந்தது.

முதலாவது அலையை எவ்வாறு கட்டுப்படுத்தியதென்று எங்களுக்குத் தெரியும். முதலாவது அலை ஏற்பட்ட போது கொவிட்டை கட்டுப்படுத்த செயற்பட்ட சுகாதார பிரிவில் சிறந்த வைத்தியர்கள் இருந்தார்கள்.

அதனால்தான் கட்டுப்படுத்த முடியுமாகியது. ஆனால் அதற்கு பின்னர் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் இருந்த அனைத்து வைத்தியர்களும் அரசியல் நோக்கத்துக்காக அங்கிருந்து நீக்கப்பட்டனர்.

அதன் காரணமாகத்தான் தற்போது கொவிட்டைக் கட்டுப்படுத்த முடியாமல் போயிருக்கின்றது. இந்த நிலைமைக்கு அரசாங்கம் பொறுபுக்கூறவேண்டும்.

அத்துடன் அரசாங்கத்திடம் கொவிட்டை கட்டுப்படுத்த தடுப்பூசி பெற்றுக்கொள்ள எந்த வேலைத்திட்டமும் இருக்கவில்லை. மாற்றுவழி இல்லாத கட்டத்திலேயே தடுப்பூசியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் முடிவெடுத்தது.

ஏதோவொரு பாணியை மக்களுக்கு அறிமுகப்படுத்தி அதனைக் குடிப்பதற்கே அரசாங்கம் இடமளித்திருந்தது. தடுப்பூசியை ஆரம்பத்திலேயே பெற்றுக்கொண்டிருந்தால் இந்தளவு பாதிப்பு ஏற்பட்டிருக்காது.

அதனால் அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களால் இன்று கொவிட் தொற்றால் நாளொன்றுக்கு 80 இற்கும் அதிகமானவர்கள் மரணிக்கின்றனர்.

எனவே அரசாங்கம் நகர அபிவிருத்திக்காக ஒதுக்கும் நிதியை மக்களின் உயிரைப் பாதுகாக்க ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இல்லாவிட்டால் நகரம் அழகாகும்போது அதனை அனுபவிக்க மக்கள் இருக்கார் சவக்குழிகளே இருக்கும். – என்றார்.

# ரெஷான் ரணசிங்க எம்.பியினது பணத்திலேயே ஜப்பான் சென்றேன்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

இலங்கையிலிருந்து ஒலிம்பிக் சர்வதேச போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்ட வேண்டுமென்ற மனநிலையில் வீர,வீராங்கனைகள் இல்லை.

இம்முறை ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய வீராங்கனை ஒருவர் ஓடுவதற்கான பாதணியை வீட்டில் வைத்துவிட்டு சென்றுள்ளார். எனவே, விளையாட்டு வீர,வீராங்கனைகளின் ஒழுக்க விதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இளைஞர், விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

நாம் ஜப்பான் சென்றமை தொடர்பில் விமர்சிக்கப்படுகின்றது. ரெஷான் ரணசிங்க எம்.பி தொழில் ரீதியாக ஜப்பான் சென்றார், அவரின் பணத்தில் தான் நான் ஜப்பான் சென்றேன். நாம் அரசுக்கு செலவு வைப்பதில்லை எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை வாய்மூல வினாக்களுக்கான விடைகள் நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற வீர, வீராங்கனைகளில் மூன்று பேர் மட்டுமே தகுதி காண் அடிப்படையில் தெரிவானவர்கள்.

ஏனையவர்கள் வைல்ட் கார்ட் அடிப்படையில் தெரிவானவர்கள். இவர்களில் தகுதிகாண் அடிப்படையில் தெரிவானவர்களுக்கு 30 லட்சம் ரூபாவும் வைல்ட் கார்ட் அடிப்படையில் தெரிவானவர்களுக்கு 20 லட்சம் ரூபாவும் பயிற்சியாளர்களுக்கு 10 லட்சம் ரூபாவும் வழங்கினோம். இவர்களை சினமன் கார்டின் ஹோட்டலில் தனிமைப்படுத்தி வைத்திருந்தோம்.

இலங்கையிலிருந்து ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்டுவதற்கு உரிய மனநிலையில் வீர, வீராங்கனைகள் இல்லை. தேசிய மட்டத்தில் போட்டிகளில் வெற்றியீட்டுவதே அவர்களின் பிரதான இலக்காக உள்ளது. அதனைத்தாண்டி செல்லும் மனநிலை கிடையாது.

இம்முறை ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய வீராங்கனை ஓடுவதற்காக பயன்படுத்தப்படும் பாதணியை வீட்டில் வைத்து விட்டு சென்றுள்ளார் .எனவே விளையாட்டு வீர, வீராங்கனைகளின் ஒழுக்க விதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஒலிம்பிக் போட்டியில் இலங்கை வீராங்கனை ஒருவர் அணிந்திருந்த உடை தொடர்பில் சமூக வலையத்தளங்களில் வெளியிடப்பட்ட சர்சையான கருத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளோம்.

சில வீரர்கள் தாம் வழமையாக அணியும் உடையை அணிவதாக ஒலிம்பிக் குழுவிடம் கூறியுள்ளனர். அவ்வாறு இடம்பெற முடியாது. வீர, வீராங்கனைகளில் நடத்தை விதிகளே இதற்குக் காரணமாகும். இதுதொடர்பில் நாம் உரிய நெறிமுறைகளை உருவாக்க வேண்டும். நடத்தை விதிகளை நாடாளுமன்றத்தில் சட்டமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதேவேளை ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வெற்றிகொள்ள ஒரு நாடு 10 முதல் 15 வருடங்கள் தயாராகின்றது. இம்முறை ஜப்பானும் அவ்வாறானதொரு முறைமையைபின்பற்றியேபதக்கங்களை வெற்றிகொண்டு வருகிறது.

எமது நாட்டில் ஆறுமாதங்களுக்கு ஒருமுறை வேலைத்திட்டங்கள் மாற்றப்படுகின்றன. இந்த நிலைமையை மாற்றியமைக்க நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

விளையாட்டு கவுன்சில் ஊடாக 2032 ஆம் ஆண்டுவரையான பத்தாண்டு திட்டமொன்றின் ஊடாக இந்த இலக்கை அடைந்துகொள்ள எதிர்பார்க்கிறோம்.

ஒலிம்பிக் போட்டிகளை மையப்படுத்திய நீண்டகாலத் திட்டமொன்று செயற்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தில் நாம் பதக்கங்களை வெற்றிக்கொள்வதற்கான போட்டிகளை அடையாளம் காண வேண்டும்.

துப்பாக்கிச் சூடு, பளு தூக்கல் உட்பட பல்வேறு விளையாட்டுகளை அடையாளம் கண்டுள்ளோம். வெளிநாடுகளுக்கு அனுப்பி இவர்களுக்கு பயிற்சியை அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போதைய சூழலில் 5 பேர் இவ்வாறு வெளிநாடுகளுக்கு அனுப்பி பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

அதேபோன்று போட்டியாளர்களும் வெற்றியை இலக்குவைத்த மன உறுதியுடன் தமது விளையாட்டை முன்னெடுக்க வேண்டும். வீரர்களின் மனவலிமையைப் பலப்படுத்தும் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படுகிறது. விளையாட்டு சங்கங்களை நெறிப்படுத்த விசேட சட்டமூலமொன்றை ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். ஆகவே, குறுகிய மற்றும் நீண்டகால இலக்குகளுடன் எமது வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. – என்றார்.

# ரிஷாத்தின் விடுதலைகோரி கையெழுத்து வேட்டை






குற்றப்புலனாய்வு பிரிவினரால் (சி.ஐ.டி) 100 நாள்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்யுமாறு கோரி கையெழுத்து பெறும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை புத்தளத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதிக்கு கருணை மனு ஒன்றைக் கைய ளிக்கும் நோக்கில் நாடுபூராகவும் உள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போராளிகள் பொதுமக்களிடமிருந்து ஒரு லட்சம் கையொப்பங்களை பெறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், கற்பிட்டி பிரதேச சபைக்கு உட்பட்ட விருதோடை மற்றும் கொத்தாந்திவு ஆகிய பகுதிகளிலும் கடந்த வெள்ளிக்கிழமை கையொப்பங்கள் பெறப்பட்டன.

இதன்போது பொதுமக்கள், அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் கட்சி பேதங்களுக்கு அப்பால் மிகவும் ஆர்வதுடன் கலந்து கொண்டு நூற்றுக்கணக்கானோர் கையெழுத்துக்களை இட்டனர்.

இவ்வாறு பொதுமக்களிடம் பெறப்படும் கையெழுத்துக்களைத் ஒன்று திரட்டி உரிய கோரிக்கை அடங்கிய மகஜருடன் ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ளதாக ஏற்பாட்டார்கள் தெரிவித்தனர்.

அத்துடன், கொத்தாந்தீவு பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையை அடுத்து சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அமைதியான முறையில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 'தொலைபேசியில் பேசியது குற்றமா?' ,'அரசியல் பழிவாங்களை நிறுத்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத்தை விடுதலை செய்' என்று எழுதப்பட்ட பல சுலோகங்களை ஏந்தியவாறு முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் விடுதலையை வலியுறுத்தி கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் முஹம்மட் ஆஷிக், முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப் பினர் எஸ்.எச்.எம்.நியாஸ் உள்ளிட்ட பலர் இந்த ஆர்ப் பாட்டத்தில் பங்கேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை பழங்குடியினர் மத்தியில் முதலாவது கொவிட் மரணம் பதிவு


இலங்கையில் வாழும் பழங்குடியினர் மத்தியில் முதலாவது கொவிட் மரணம் பதிவாகியுள்ளது.

பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், தம்பானே, பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் என பழங்குடியினரின் தலைவர் ஊருவரிகே வன்னிலஎத்தன் தெரிவித்துள்ளார்.

அவருக்கு நீண்ட காலமாக பல நோய் நிலைமைகள் காணப்பட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# பொது அறிவு வாராந்த ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக்கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பிரசுமாகும்.

சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.

தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியானபதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

01. இந்தியாவின் முதல் செயற்கை கோள் எது?

02. தற்போது நடைபெறும் ஒலிம்பிக்போட்டி எந்த நாட்டில் நடைபெறுகிறது?

03. 1, 4, 9, 16 ............... என்ற எண் தொடரின் அடுத்து வரும் இரு எண்கள் எவை?

04. உலகில் மிகப் பெரிய மலரினம் எது?

05. பாம்புஎதன்மூலம்வாசனையைஉணர்கின்றது?

06. வயிற்றில் பல் இருக்கும் உயிரினம் எது?

07. தனது உடம்பை விட நீளம் கூடிய நாக்கைக் கொண்ட விலங்கு எது?

08. மனிதனின் உமிழ்நீரின் PH யாது?

09. பறவைத் தீவு என அழைக்கப்படும் நாடு எது?

10. உயிர்காக்கும் உன்னத உலகம் என அழைக்கப்படுவது?

**பெயர் :- ..............................................**
**முகவரி :- ..........................................**
**தொலைபேசி இலக்கம்:- ....................**
**அடையாள அட்டை:- .........................**
**மின்னஞ்சல் முகவரி:- .......................**

## 01.08.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

| | |
|---|---|
| 01. 25 | 06. புதன்கிழமை |
| 02.8 நிமிடங்கள் | 07. 2:1 |
| 03.ஏலக்காய் | 08. 35 |
| 04. பேகன் | 09. 12, 36 வயதுகள் |
| 05. சுரதா | 10. 12 வருடங்களின் பின் |

## சரியான பதிலளித்தவர்கள் விவரம் -

| | | |
|---|---|---|
| ஜே.கௌசிகா – | ஏழாலை. | 07 |
| கே.சரிகா – | நெடுந்தீவு. | 07 |
| ஏ.துஷான் – | நீர்வேலி. | 09 |
| ஆர்.மாலதி– | உடுப்பிட்டி. | 09 |
| ஏ.அஸ்லாம் – | அனுராதபுரம். | 08 |
| பி.ஸ்ருதி – | மட்டக்களப்பு. | 08 |
| எஸ். துவாரகா– | மட்டக்களப்பு. | 08 |
| கே.அனுசன் – | ஏழாலை. | 08 |
| ஐ. கார்த்திகன் – | யாழ்ப்பாணம். | 10 |
| கே.ஸ்ரீதரன் – | கொழும்பு. | 06 |
| எஸ்.சதுர்ஜினி – | அல்வாய் | 08 |
| ஜெ.வினோஜன்– | குடத்தனை | 09 |

# பூட்டிய வீட்டில் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

ஹொரண - வேகட வீதியின் பெரண்டிய விகாரைக்கு அருகில் பூட்டப்பட்ட வீட்டில் இருந்து 86 வயதுடைய பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற ஆசிரியர்களான தம்பதியினரின் குறித்த வீட்டில் சேவையாற்றி வந்த பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தம்பதியினர் கொவிட் தொற்றுக்கு உள்ளான நிலையில் அவர்கள் தனிமைப்படுத்தல் முகாம்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் குறித்த வீட்டில் கடமையாற்றிய உயிரிழந்த பெண் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளாமல் குறித்த வீட்டில் தனியாக இருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்த பெண்ணுக்கு கொவிட் தொற்று உள்ளதா என உறுதி செய்வதற்காக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# லொறி சாரதி ஒருவர் இரத்மலானையில் சாவு

இரத்மலானையில் கொள்கலன் லொறி ஒன்றிற்குள் சாரதி ஒருவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இரத்மலானை சுமங்கல வீதியிலுள்ள பிரதான ஆயுர்வேத தயாரிப்பு நிறுவனத்திற்கு பொருள்கள் கொண்டு சென்ற சாரதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் புலத்சிங்கல கோவில் வீதி பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடையவர் என குறிப்பிடப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை இரவு சம்பவ இடத்திற்கு வந்த கொள்கலன் லொறியின் சாரதி வாகனத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். எப்படியிருப்பினும் வெள்ளிக்கிழமை காலை அவரை அழைத்த போது எழுந்திருக்காமையால் கல்கிஸ்ஸ பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவருக்கு கொவிட் பரிசோதனை மேற்கொள்வதற்காக சடலம் களுபோவில வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## மணமகள்தேவை

பிறந்ததிகதி - 09/09/1989 (யாழ்ப்பாணம்), நட்சத்திரம் - மூலம், இராசி - தனுசு, சூரி/செவ் 9இல், ஜாதி - V
தகைமை - **Software Engineering (Annamalai University India)**
தொழில் - **Software Engineer (Colombo)**
எதிர்பார்ப்பு - கொழும்பில் வசிக்கும் யாழ்ப்பாணத்தவர் விரும்பத்தக்கது

தொடர்பு இல - **0762466850**
**0114980435**



# மாங்கல்யா

## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
077 197 1667
077 316 4796

### மணமகன் விவரம்

பிறந்த திகதி – 1987.05.08 மதம் – இந்து
ஜாதி – p பகுதி ஆண் நட்சத்திரம் – பூரம் 1
கி.பா – 34 செவ் – 1 இல்
தகைமை – G.C.E A/L தொழில் – British council
எதிர்பார்ப்பு – அரச சேவை + வெளிநாடு மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1985.04.16 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – சதயம்
கி.பா – 9 செவ் – 12 இல்
தகைமை – B.SC M.SC தொழில் – Software engineer
எதிர்பார்ப்பு – U.S.A + Ceylon மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1987.06.14 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – உத்தராடம் 1
கி.பா – 23 செவ் – 11இல்
தகைமை – B.FA
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1987.06.11 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – கேட்டை
கி.பா – 30 செவ் – 9இல்
தகைமை – B.SC தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை

பிறந்த திகதி – 1989.11.10 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – உத்தராட்டாதி
கி.பா – 18 செவ் / சூரி – 9இல்
தகைமை –B.SC தொழில் – ENG(company)
எதிர்பார்ப்பு – பட்டதாரி மணமகள் தேவை

பிறந்த திகதி – 1978.08.01 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருவாதிரை 4
கி.பா – 29 செவ் – 03இல்
தகைமை – BIT
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – படித்த மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1980.10.26 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – கார்த்திகை 4
கி.பா – 30 செவ் – 1இல்
தகைமை – G.C.E A/L தொழில் – சொந்தக் கடை
எதிர்பார்ப்பு – A/L படித்த கிளிநொச்சி மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1990.06.22 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருவாதிரை 1
கி.பா – 65 செவ் – 12இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor நலம் Bank மணமகள் தேவை

### மணமகள் விவரம்

பிறந்த திகதி – 1991.11.23 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – ரோகினி 4
கி.பா – 21 செவ் / சூரி 10இல்
தகைமை –I.T தொழில் – company (jaffna)
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன்

பிறந்த திகதி – 1994.01.01 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 56 செவ் / சூரி 7இல்
தகைமை – HNDA தொழில் – Management assistant
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன்

பிறந்த திகதி – 1991.09.28 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – கார்த்திகை 2
கி.பா – 18 செவ் சூரி – 10இல்
தகைமை – B.Com AAT தொழில் – Company
எதிர்பார்ப்பு – அரசசேவை Australia canada பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி – 1996.01.23 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – சதயம்
கி.பா – 17 செவ் /சூரி – 11இல்
தகைமை – Computer Eng தொழில் – Company
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகன்

பிறந்த திகதி – 1989.09.24 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூனர்பூசம் 2
கி.பா – 18 செவ்/ சூரி – 12இல்
தகைமை – Chatted Accountant தொழில் – Accountant
எதிர்பார்ப்பு – பட்டதாரி அவுஸ்ரேலிய PR மணமகன் தேவை.

பிறந்த திகதி – 14.02.1992 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மிருகசீடம் 2
கி.பா – 26 செவ் – 2இல்
தகைமை – Software Eng தொழில்–அரசசேவைகொழும்பு
எதிர்பார்ப்பு – கொழும்பில் அரச சேவை மணமகன்

பிறந்த திகதி – 16.014.1991 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பரனி2
கி.பா – 22 செவ் – 2இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor ENG. மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1990.12.08 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 24 செவ் – 8இல்
தகைமை – M.B.B.S தொழில் – Docter
எதிர்பார்ப்பு – Docter ENG. மணமகன் தேவை.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000




# அனைத்துலக தமிழ் சொந்தங்களே!

வடகணினியம்
வடக்கை கணினிமயமாக்குவோம்
Vadakaniniyam - Let's computerize the North

## நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னேற்றப் பாதையினில் பாதம் பதிப்போம்
## உங்களின் தார்மீக பங்களிப்பை நாடிநிற்கும் வடகணினியம்!

அயராத எமது நீண்டகால முயற்சிகளின் பின்னர் 'வடக்கை கணினி மயமாக்குவோம்' எனும் சீரிய சிந்தனையுடனும் தூர நோக்குடனும் வடகணினியம் நிறுவப் பட்டுள்ளது.

அதிஉயர் தொழில் நுட்பங்களுடன் கூடிய பிராந்தியமாக வடக்கு கிழக்கு மாகாணங்களை உருவாக்கும் நோக்குடன் பல திட்டங்களை வகுத்துள்ளது வடகணினியம். இதில் முதல் கட்டமாக மென்பொருள் பொறியியலாளர்கள் (Software Engineers), தகவல் தொழில் நுட்பவியலாளர்கள் (Information Technologists) என அனைத்து உலகளாவிய தமிழர்களையும் ஒருங்கிணைத்து கணினித்துறையில் பாரிய அளவிலான ஒரு முன்னேற்றத்தை அடைய வடகணினியம் முயற்சிகளை முன்னெடுக் கின்றது.

வடகணினியம் அத்துடன் வடபகுதியிலும் வெளிநாட்டிலும் உள்ள ஆர்வமுள்ள கணினி தொழில்நுட்பம் சார்ந்த முதலீட்டாளர்களை ஈர்ப்பதுடன் அவர்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியும் அவர்களின் தேவைகளை கேட்டறிந்து பூர்த்தி செய்தும் வருகின்றது .

வடகணினியத்தின் இன்றைய தேடலில்

1) மென்பொருள் உற்பத்தி (Software Development) – உங்களுக்கோ அல்லது நீங்கள் வேலை செய்யும் நிறுவனத்துக்கோ மென்பொருள் உற்பத்தி தேவைப்படுகின்றதா?
2)உங்களால் உருவாக்கப்பட்ட அல்லது நீங்கள் பாவிக்கும் மென்பொருட்களை பராமரிக்கும் வேலைகளை இலங்கைக்கு அனுப்ப முடியுமா ?
3)தரவுகளை பதிவிடலும், ஆவணங்கள் காப்பகப்படுத்தல் (archive documents) ***
4)காணொளி தொகுப்பாக்கம் (video editing) ***
5)உங்களிடமோ அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களிடமோ இருக்கும் மென்பொருள் உற்பத்தி சம்பந்தமான வேலைகளை இலங்கைக்கு அனுப்ப முடியுமா?
6)நீங்கள் ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனம் வடக்கில் ஆரம்பிக்க விரும்புகிறீர்களா?

**மேலே குறிப்பிட்ட விடயங்கள் குறித்து ஏதாவது சந்தேகங்களோ மேலதிக விபரங்களோ தேவைப்படின் எங்களை**

**தொலைபேசி : 1094 77 593 0335** WhatsApp Viber **/ 1094 21 221 7994**
**மின்னஞ்சல் : support@vadakaniniyam.com வலையமைப்பு: www.vadakaniniyam.com**

**தொடர்பு கொள்ளுங்கள்**

தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி! ஒன்று பட்டால் உண்டு வாழ்வு!

**Coming Together is Beginning - Staying Together is Progress - Working Together is SUCCESS.**

காலைக்கதிர் Kalaikkathir

# இளம் குடும்பம் ஒன்றின் தற்காலிக வீடு தீக்கிரை



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட கைவேலிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தின் போது இளம் குடும்பம் ஒன்றின் தற்காலிக வீடு முற்று முழுதாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

கடந்த 2018 ஆண்டு தொடக்கம் குறித்த தற்காலிக வீட்டில் வசித்து வரும் இளம் குடும்பம் கைக்குழந்தையுடன் வாழ்ந்து வந்த நிலையில் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தின் போது தற்காலிக வீடு முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

நாளாந்தம் கூலி வேலை செய்யும் இளம் குடும்பத்துக்கு இதுவரை அரசாங்கத்தின் எந்த உதவியும் கிடைக்காத நிலையில் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

இந்த தீ விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

வீட்டில் இருந்த உணவுப்பொருள்கள், புடைவைகள், பணம், நகை உள்ளிட்ட ஏனைய பொருள்கள் அனைத்தும் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ST.ANTONY'S COMPUTER
3 YEARS Warranty
90,000 ஆயிரம் முதல்
021 222 4865
075 069 8608
189, K.K.S Road, Jaffna Town.

HIKVISION Mega Store
No.1 WorldWide CCTV and Video Surveillance
கிக் விஷன் மெகா ஸ்ரோர்
வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
Main Show Room in Northern Province
உங்கள் வீடுகள்,அலுவலகங்கள், வங்கிகள்,கோயில்கள் மற்றும் பொது பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு, குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தி தரப்படும்
நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் மற்றும் உதிரிபாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்
Hot Line - 021 222 7126
hik visionmegastore@gmail.com
இல-164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
164, Palaly Road, Thirunelvely, Jaffna
077 473 6057
077 287 1841
077 899 2923

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
070 330 5500
075 330 5500
077 888 9388
லண்டன் 1000/= (11 kg க்கு மேல்)
பிரான்ஸ்,ஜேர்மனி,பெல்ஜியம், டென்மார்க்,நெதர்லாந்
11 Kg க்கு 13,000/=
மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் 1100/=
1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி கைதடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு கனகராயன் குளம்
மல்லாவி மன்னார் வவுனியா திருகோணமலை மட்டக்களப்பு கொழும்பு

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622

With Best Compliment From .....
THE SASIKA DRIVING SCHOOL TSL
சசிகா லேணர்ஸ்
L
Reg. No - DS882
"அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை"
THE SASIKA LEARNERS
முறைமையான சாரத்தியத்தை கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
CHOOSE RIGHT WAY
தலைமைக்காரியாலயம்
இல. 57 வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
021 221 7578/ 7678
077 614 0361, 077 722 6247
sasikadrivingschool@gmail.com
sasikalearners.com
கிளை நிறுவனங்கள்
உரிமையாளரின் தொடர்புக்கு - 0777 226 247 / 077 614 0361
யாழ் மத்தி (Twon) 021 222 8004 070 3015004
சாவகச்சேரி 021 227 0616 071 557 0616
மல்லாகம் 021 224 3393 070 301 3014
நெல்லியடி 021 226 0999 071 775 0999
சங்கானை 021 225 1664 070 301 3016
காரைநகர் 021 225 2454 070 510 2484
பண்டத்தரிப்பு 021 225 2333 071 255 4135
வேலணை 021 221 5472 070 301 3012

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.08.2021 இல் வெளியிடப்பெற்றது.